பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 16, வெள்ளிக்கிழமை 30.06.2017 கதிர் 236

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# மாகாணசபையைக் கலைத்துவிட்டு தேர்தலை எதிர்கொள்ள வாருங்கள்!



அரசியல் சவால் விடுக்கும் சுமந்திரன் எம்.பியும் முதலமைச்சர் விக்கியும் நேற்றிரவு யாழ்.ரில்கோ ஹோட்டலில் இந்தியத் தூதுவர் அளித்த இரவு விருந்தின் போது சிரித்தபடி ஒன்றிணைந்து 'காலைக்கதிருக்கு' 'போஸ்' கொடுத்த போது....

## சுமந்திரனும் சிறிதரனும் முதல்வருக்குச் சவால்

கொழும்பு, ஜூன் 29

**தமிழ் மக்களின் அமோக ஆதரவு தமக்கு இருக்கின்றதென்று வடக்கு மாகாண சபை முதல்வர் நம்புவாராயின், மாகாண சபையைக் கலைத்து விட்டு அவர் தேர்தலை எதிர் கொண்டு வெற்றியடைந்து காட்ட வேண்டும்.**

**- இவ்வாறு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்குச் சவால் விடுத்திருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரனும், சி.சிறீதரனும்.**

கொழும்பில் தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட சுமந்திரன் எம்.பி. இந்தச் சவால் பற்றியவிடயத்தைப்பகிரங்கப்படுத்தினார்.

மக்கள் செல்வாக்குத் தமக்கு இருப்பதாக முதலமைச்சர் நன்றி தெரிவிப்பு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றமை குறித்து இந்த நிகழ்வில் சுமந்திரனிடம் வினவப்பட்டது.

"கட்சியை விடத் தமக்குத் தான் செல்வாக்கு இருக்கின்றது என முதல்வர் கருதுவாராயின், சிறிதரன் எம்.பி. விடுத்த சவாலை ஏற்று, அவர் மாகாண சபையைக் கலைத்து விட்டு, தேர்தலை எதிர்கொண்டு,

பக்கம் 18 >>>

## அனந்தி, சர்வேஸ்வரன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்

இது தற்காலிக ஏற்பாடு, 3 மாதங்களின் பின் மீளாய்வு என்கிறார் முதல்வர்





(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்திற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இரு அமைச்சர்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரேமுன்னிலையில்பதவிகளைப்பொறுப்பேற்றுக் கொண்டனர்.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சராக க.சர்வேஸ்வரனும் மற்றும் மகளிர்

பக்கம் 18 >>>

## மதத் தலைவர்களுடன் இந்தியத் தூதுவர் யாழில் சந்திப்பு

யாழ். வருகை தந்த இந்தியத்தூதுவர்தரன்ஜித் சிங்நேற்று யாழ்ப்பாணத்தில் ஆயர் யஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசத்தைச் சந்தித்தார்.

பக்கம் 18 >>>











இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் நேற்றிரவு அளித்த விருந்தின் போது.....

அதே விருந்தின் போது முதல்வர் விக்னேஸ்வரனுக்கு விளக்கமளிக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா. நடுவில் டக்ளஸ் எம்.பி.

## யாழ்.நீதிவானின் வீட்டின் மீது நேற்றிரவு கல்வீச்சுத் தாக்குதல்

இலக்குத் தவறி வீழ்ந்தது எனத் தகவல்

உரும்பிராய், ஜூன் 30

பலகையாளியின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்டகல்வீச்சுத்தாக்குதல் இலக்குத் தவறி யாழ். நீதிவான் எஸ்.சதீஸ்தரனின் வீட்டையும்தாக்கியது என அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தமது முகங்களைக்

பக்கம் 18 >>>

## தற்காலிக அமைச்சர்கள் நியமனம் குறித்து சம்பந்தனுக்கு முதல்வர் விளக்கக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன் ஆகியோரை வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களாகத் தான் தற்காலிகமாக நியமித்தமையின் பின்னணி மற்றும் காரணங்கள் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், விளக்

பக்கம் 18 >>>

## வித்தியா சீரழிக்கப்பட்ட விவரம்: மூடிய நீதிமன்றில் சாட்சியம் பதிவு

ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள் அச்சமயம் வெளியேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் அரச சாட்சியாக மாறிய - திருப்பு முனையான சாட்சியத்தை வழங்குவார் எனக் கருதப்பட்ட - உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவரின் சாட்சியம் நேற்றுப் பொதுமக்களும், பார்வையாளர்களும், ஊடகவியலாளர்களும் வெளியேற்றப்பட்ட நிலையில் - மூடிய நீதிமன்றத்தில் - பதிவு செய்யப்பட்டது.

வித்தியா கொலை

பக்கம் 14 >>>

காலைக்கதிர்



# உரிமைகள் குறித்த சட்டமூலத்தை இலங்கை நிறைவேற்ற வேண்டும்

## வலியுறுத்துகிறது ஐ.நா.பொருளாதார, சமூக, கலாசார குழு

இலங்கையில் உரிமைகள் தொடர்பான சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான குழு வலியுறுத்தியுள்ளது.

தற்போது அநேக பொருளாதார மற்றும் சமூக விடயங்கள், அரசமைப்பின் அரச கொள்கையின் வழிகாட்டல் தத்துவங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றமையையிட்டு அந்தக் குழு விசனம் தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவின் நேற்று முன்தினம் இடம்பெற்ற வருடாந்தக் கூட்டத்தில் இலங்கை தொடர்பான அறிக்கை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்தக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசமைப்பின் 29ஆவது பிரிவின் படி இந்த வழிகாட்டல் தத்துவங்கள், சட்ட அல்லது கடப்பாடு என்பன எந்த நீதிமன்றத்தாலும் நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தப்பட முடியாதவை.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அடக்கிய விரிவான ஓர் உரிமைகள் சட்டமூலத்தைக் கொண்டு வருதல் உட்பட அரசமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையை இலங்கை அரசு விரிவுபடுத்த வேண்டும் .

புதிய அரசமைப்பில் சுயாதீனமான அமைப்பாக இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழு அமைய வேண்டும்.

அரசு, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு போதுமான வளங்களை உறுதி செய்து அதன் பரிந்துரைகளை பொருத்தமான அரச நிறுவனங்கள் முறையாக தமது கவனத்துக்கு எடுக்க வேண்டும். அரசு, நீதிபதிகள், சட்டத்தரணிகள் சுயாதீனம் பற்றிய 2017 விசேட அறிக்கையாளரின் பரிந்துரைகளை கவனத்தில் எடுக்க வேண்டும். இதன்மூலம் நீதித்துறையின் முழு சுயாதீனம் உறுதி செய்யப்படும். ஒரு பாலின நடத்தை பெரிய குற்றச்செயல் அற்றதாக்கும் வகையில் குற்றவியல் சட்டகோவை திருத்தப்பட வேண்டும்.

ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு, மாற்று பாலியல் முறை விருப்பமுள்ளவர்கள் பற்றி கல்வியூட்ட அரசு திட்டங்களை வகுக்க வேண்டும்.- என்றுள்ளது. (எ)

## மீன்பிடி தொடர்பில் புதிய சட்டமூலம்

கொழும்பு, ஜூன் 30

மீன்பிடி தொடர்பானபுதிய சட்டமூலம் எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என மீன்பிடி மற்றும் நீரியல்வளஅமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர் போராட்டத்துக்கு ஏற்பாடு!


கொழும்பு, ஜூன் 30

'சைட்டம்' தொடர்பான பிரச்சினையை முன்னிறுத்தி, எதிர்வரும் தினங்களில் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துவதற்கு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற விசேட மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படும் தினம் சங்கத்தின் செயற்குழுவால் தீர்மானிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## துனிசியா தூதுவர்-பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு



இந்தியா மற்றும் இலங்கைக்கான துனிசியா தூதுவர் நேஜ்மெட்டின் லஹால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேயவர்தனவைச் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இருவருக்குமிடையில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக சுமுகமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நினைவுச் சின்னத்தை வழங்கினார். (எ)

# காலத்தைக் கடத்தாது ஜனாதிபதி உரிய பதில் வழங்க வேண்டும்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து




எமக்கு உரிய பதில் வழங்கப்படும் வரை எமது போராட்டம் முன்னெடுக்கப்படும். காலத்தைக் கடத்தாது ஜனாதிபதி எங்களுக்கு உரிய பதில் வழங்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட மற்றும் போர்க் காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின், உறவுகளின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில் வவுனியா வீதி அதிகார சபைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்போராட்டமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று 113 ஆவது நாளாகவும்-

யாழ்ப்பாணம் மருதங்கேணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமும்-

திருகோணமலை மாவட்ட ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெறும் போராட்டமும் - தொடர்ந்து முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

# மயிலிட்டி துறைமுகத்தை புனரமைத்துத் தரவேண்டும்

## மீள்குடியேற்ற அமைச்சரிடம் டக்ளஸ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலிகாமம் வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்படும் மயிலிட்டி துறைமுகத்தை மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற விதத்தில் புனரமைத்துத் தர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமி நாதனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், மயிலிட்டி துறைமுகத்தை மக்கள் பாவனைக்கு ஒப்படைப்பதற்கு படையினர் இணங்கியுள்ளமைக்குத் தமது வரவேற்பைத் தெரிவிக்கிறார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் 3ஆம் திகதி அந்தத் துறைமுகம் மற்றும் அதனை அண்டியசில காணிகளை விடுவிப்பதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளமை கடற்தொழில் ஈடுபடும் அந்தப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவும்.



மயிலிட்டித் துறைமுகத்தை படையினர் விடுவிப்பதுடன் தையிட்டி வடக்கு ஜே/249 கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட 54 ஏக்கர் காணியை மக்களின் பாவனைக்காக விரைவில் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.-என்றார். (எ)

# முதல்வருடன் இந்தியத் தூதுவர் அரசியல் பேசுவதைத் தவிர்த்தார்

## பொருளாதார முன்னேற்றமே இப்போது அவசியம் என நேற்று யாழ்ப்பாண சந்திப்பின்போது தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபோது, அரசியல் பேசுவதைத் தவிர்த்துக்கொண்டார்.

"அரசியல் இன்று வரும் நாளை போகும். ஆனால், பொருளாதார முன்னேற்றமே இப்போது அவசியம்" எனக் கூறி வடக்கு முதல்வரின் வாயை இந்தியத் தூதுவர் அடக்கிக்கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடக்கு முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் ஆகியோரை தனித்தனியே அவர்களின் அலுவலகங்களில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முற்பகல் 11.20 மணியளவில் வடக்கு முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிய இந்தியத் தூதுவர், யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவே அதிகம் கலந்துரையாடினார் என வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

'இந்தியத் தூதுவர் அரசியலில் விவகாரங்கள் தொடர்பில் எதுவும் பேசவில்லை, அரசியல் பேசுவதற்கும் அவர் ஆர்வம் காட்டவில்லை.

வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி, மன்னார் - இராமேஸ்வரம் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பொருளாதார ரீதியில் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களுக்கு உதவ இந்தியா தயாராக இருக்கின்றது. எனவும் இந்தியத் தூதுவர் உறுதியளித்தார்.

வடக்கில் உள்ள 50 இளைஞர், யுவதிகளுக்கு இந்தியாவில் கற்றலுக்கான புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில் 4 பேர் மட்டுமே விண்ணப்பித்திருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

தலைமன்னார் - தனுஷ்கோடி இடையிலான பயணிகள் படகுச்சேவையை ஆரம்பிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என நான் கோரியிருந்தேன்.

இந்த விடயத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்திய மற்றும் இலங்கை மத்திய அரசாங்கங்களுடன் பேச்சு நடத்தப்படும் என அவர் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, வடமாகாண முதலமைச்சர் நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்படாமை தொடர்பாகவும் அவருக்கு தெரியப்படுத்தினேன். - என வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (ம)

## போதையில் தம்பியை கொன்ற அண்ணன்!

கேகாலை, ஜூன் 30

மதுபோதையில் ஏற்பட்ட சண்டையில் சொந்தத் தம்பியை அடித்துக் கொலை செய்த சம்பவம் கேகாலையில் இடம்பெற்றுள்ளது.

கேகாலைப் பகுதியில் மது போதையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது, மூத்த சகோதரர் (43 வயது) தனது இளைய சகோதரரை (40 வயது) தடியொன்றினால் தாக்கியுள்ளார்.

இதனால், படுகாயமடைந்தவர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## 15 மாணவர்கள் ஒன்றாகக் கைது!

கொழும்பு, ஜூன் 30

படுவஸ்நுவர பிரதேசத்தில் பாடசாலையொன்றின் மாணவக் குழுக்கள் இரண்டுக்கு இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து 15 மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அந்தப் பாடசாலையின் 12ஆம் மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்கிடையில் நீண்ட நாள்களாக நிலவிய தகராறு காரணமாக நேற்று முன்தினம் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் காயம் அடைந்த மாணவரொருவர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் நேற்று ஹெட்டிபொல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (உ)

## மக்கள் எதிர்பார்க்கும் அளவு சேவையாற்ற வடக்கு மாகாண சபையில் நிதி இல்லை

### புதிய அமைச்சர் அனந்தி சசிதரன் கவலை



அமைச்சுப் பதவி கிடைத்த போதிலும் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்களுக்கு உதவுவதற்கு வடக்கு மாகாண சபையில் நிதி இருக்காது என வடக்கு மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கவலை வெளியிட்டுள்ளார்.

எனினும், மக்களுடைய பிரச்சினைக்கு நான் தொடர்ந்து குரல் கொடுத்து அவர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவேன் எனவும் அவர் கூறினார்.

நேற்று புதிய அமைச்சராகப் பதவியேற்ற அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகார அமைச்சு எனக்கு கிடைத்திருக்கின்றது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த அங்கீகாரம்.

எனினும், அமைச்சுப் பதவி கிடைத்த உடனேயே பல தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. ஏதோ கோடிக்கணக்கில் பணம் இருப்பதாக மக்கள் நினைக்கின்றார்கள். ஆனால் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு நிதி வடக்கு மாகாண சபையில் இருக்காது என நினைக்கின்றேன். - என்றார். (ம)

## வவுனியாவில் சிறுவர் இல்லம் ஒன்றில்

## தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமி ஒருவர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா-மன்னார் வீதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கிக் கல்வி கற்ற மாணவி ஒருவர் நேற்று பிற்பகல் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பெற்றோரை இழந்த நிலையில் மேற்படி சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 11 வயது மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

ஆசிரியர் ஒருவர் ஏசிய காரணத்தாலேயே அவர் தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

நேற்றுக் காலை பாடசாலைக்கு சென்ற சிறுமி மதியம் இல்லத்திற்கு திரும்பியிருந்தார். அவருக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் வைத்து அவரை ஏசினார் எனவும் அதனால் இல்லத்திற்குச் சென்ற பின்னரும் அவர் மனமுடைந்த நிலையில் காணப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் அவர் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார். இந்த மரணம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம)

## திருகோணமலை மட்கோ காட்டில் பதுங்கி இருந்த புலி பிடிக்கப்பட்டது

திருகோணமலை மட்கோ பகுதியில் உள்ள காட்டில் பதுங்கியிருந்து, அந்தக் கிராமத்தில் உள்ளவர்களின் வளர்ப்புக் கோழிகளை பிடித்துச் சென்ற கொடும்புலி எனப்படும் சிறிய வகை புலியொன்றைக் கிராமவாசிகள் பிடித்து வனஜீவராசிகள் திணைக்களத்தாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி புலி பற்றைக் காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்து கோழிகள், நாய்க்குட்டிகள் என்பனவற்றை பிடித்து உண்டுவந்தது. அந்தப் புலி நேற்று மாலை 5.30 மணி அளவில் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

அந்தப் புலியைப் பொறுப்பேற்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அதைப் பாதுகாப்பான வனப்பகுதியில் விடுவதற்காக கொண்டு சென்றனர். (ம)

## பழுது பார்த்த மெக்கானிக் மீது டிப்பர் தானாக உருண்டு ஏறியது!

யாழ்ப்பாணம் ஜூன் 30

சாவகச்சேரிப் பகுதியில் மெக்கானிக் ஒருவர் டிப்பர் வாகனத்துக்குக் கீழ் படுத்திருந்து அதனைத் திருத்திக் கொண்டிருந்தபோது அந்த டிப்பர் திடீரென நகர்ந்ததால் திருத்த வேலையில் ஈடுபட்டவரின் கழுத்தின் மீது சில்லு ஏறியது. அங்கு நின்றவர்கள் டிப்பரை முன்னே செல்லவிடாமல் தடுத்ததால் உயிராபத்துத் தடுக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமுற்ற சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த வடிவேலு சுமன் (வயது 28) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

டிப்பர் வாகனத்தின் திருத்த வேலையில் ஈடுபட்டவேளையில், வாகனம் தானாக உருண்டபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. (உ)

## குறுகிய கால அமைச்சர் பதவியில் முன்னுரிமை அடிப்படையில் பணி!

### பதவியேற்றதும் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

அமைச்சர் பதவியில் இருக்கும் குறுகிய காலத்தில், அனைத்தையும் செய்ய முடியாது. என்றாலும், முன்னுரிமை அடிப்படையில், அவற்றுக்கான சிறந்த அடித்தளத்தை இடமுடியும் என வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

புதிய அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

"மறுசீரமைப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியுள்ளன. எமக்குக் குறுகிய காலமேயுள்ளது. குறுகிய காலத்தில் அனைத்தையும் செய்ய முடியாது. என்றாலும், முன்னுரிமை அடிப்படையில் அவற்றுக்கான சிறந்த அடித்தளத்தை இட்டு சீர்செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

"எமது கல்வி மாகாண மட்டத்தில் 9ஆவது இடத்தில் உள்ளது. அதனை மேலே கொண்டு செல்ல வேண்டும். 30 ஆண்டு கால யுத்தத்தில் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் உள்ளன. அதனை ஓரிரு நாள்களில் திருத்த முடியாது. கண்டிப்பாக அதனைத் திருத்த நடவடிக்கை எடுக்க முடியும்.



"ஆனால், அனைத்து நடவடிக்கைகளையும் முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து, அமைச்சர் வாரியத்தில் விவாதித்து மாகாண சபையில் கொண்டு சென்று உறுப்பினர்களின் ஒப்புதலுடன்தான் அனைத்து நடவடிக்கையையும் மேற்கொள்வேன். மக்கள் சேவையாற்றவே அதிகாரம் வழங்கியுள்ளனர். அதனைக் கண்டிப்பாக நிறைவேற்றுவேன்." - என்றார். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதித்துறையின் சுயாதீனம்

'பானையைப் பார்த்து சட்டி கறுப்பு என்றதாம்.' - இப்படி ஒரு முதுமொழி நம் மத்தியில் உண்டு.

சில விடயங்களை விமர்சிக்க முன்னர் விமர்சிப்பவர் தன்னைப் பற்றி, அந்த விமர்சனத்துக்குத் தனக்குள்ள தகுதியைப் பற்றி, சற்று சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். அப்படி இல்லாமல் விமர்சிக்கப் புறப்பட்டால், பானையை பார்த்து சட்டி கறுப்பு என்று கூறிய மாதிரித்தான் விடயம் அமையும்.

இலங்கையின் நீதித்துறை குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது கூறியிருக்கும் கருத்தும் இத்தகைய வகையைச் சேர்ந்ததுதான்.

அகுணகொலபெலஸ்ஸ என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் தற்போது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறியிருக்கின்றார்.

நீதிமன்றின் நேர்மையைப் பாதுகாப்பது நீதித்துறை அதிகாரிகளின் பொறுப்பு என்று சுட்டிக் காட்டியுள்ள அவர், அரசியல் முடிவுகளுக்கு நீதிமன்றம் செவிசாய்க்குமானால், அது நீதியான ஆட்சிக்குப் பொருத்தமானது அல்ல என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் கூறியுள்ள கருத்து நியாயமானதுதான். ஓரளவில் அதில் உண்மையும் இருக்கக் கூடும். ஆனால், இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டுவதற்கான தகுதி நிலை அவருக்கு இருக்கின்றதா என்பதே இங்கு பிரதான கேள்வியாகும்.

மஹிந்த ராஜபக்ஷ இரும்புக் கரம் கொண்டு சுமார் ஒரு தசாப்த காலம் இந்த நாட்டை ஆட்சி செய்தவர். அவரது ஆட்சிக் காலத்தில் நீதித்துறை எவ்வாறு பந்தாடப்பட்டது என்பது வெள்ளிடைமலை. எல்லோருக்கும் தெரிந்த பிரசித்த உண்மைகள் அவை.

முதலில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி நிலை பறிபோயிருக்க வேண்டிய நிலையில் இருந்து அவர் காப்பாற்றப்பட்டார்.

'சுனாமி' நிவாரணப் பணிக்காக அரசுக்கு வந்த நிதியை, அரசுக் கட்டமைப்புக்கு வெளியே தம்மையும் ஓர் அங்கத்தவராகக் கொண்ட தனியார் கணக்குக்கு மாற்றிய 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' சர்ச்சையில் இருந்து அவரைக் கடைசி நேரத்தில் காப்பாற்றி விடுவித்தவர் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா. பிற்காலத்தில் இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் பல குழப்பகரமான செயற்பாடுகளுக்கு தமது சர்ச்சைக்குரிய தீர்ப்புகள் மூலம் பிள்ளையார் சுழி போட்டவர் என்ற விமர்சனத்துக்கு உள்ளாகி வருபவர். அவரும் மஹிந்தவும் இளமைக் கால நண்பர்கள். மஹிந்த ராஜபக்ஷவின் காதல் திருமணத்தை ஒப்பேற்றிக் கொடுத்த நண்பர் அவர்தான். மஹிந்த சந்தித்த முதலாவது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வழக்கிலிருந்து மஹிந்தவை அவர்தான் மீட்டார். தாம் அப்படி நடந்து கொண்டமையால் பின்னாளில் நாட்டுக்குப் பல பின்னடைவுகள் வந்தன என்பதை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சரத் என் சில்வாவே ஒப்புக்கொண்டார் என்பதும் கவனிக்கத்தக்கது.

மஹிந்தவின் பத்தாண்டு கால ஆட்சியில் நாட்டின் நீதித்துறை எவ்வாறு பந்தாடப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த வரலாறு. முழு நீதித்துறையுமே நிறைவேற்று அதிகாரத்தின் கைப்பொம்மையான கதை நீண்டது. பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அத்தியாவசிய எரிபொருளுக்கான விலை நிர்ணயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழங்கிய மிக முக்கிய தீர்ப்பே மஹிந்த அரசினால் நிறைவேற்றப்படாமல் தூக்கிக் கடாசப் பட்டது என்பது வரலாறு.

வடக்கு - கிழக்கு மாகாணப் பிரிப்பு எவ்வாறு நீதித்துறை ஊடாக ஒப்பேற்றப்பட்டது என்பதில் தொடங்கி, பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை வரை - பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ஊடகங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்குகள் வரை - எவ்வாறு கையாளப்பட்டன, எவ்வாறு உத்தரவுகள் வழங்கப்பட்டன என்பவை எல்லாம் கடந்த ஆட்சிக் காலக் கூத்தின் சித்துவங்களாகும்.

தானும், தனது சகோதரர்களும் அதிகாரத்தையும், நிதி வருவாயையும் தாராளமாக ருசிக்க வகை செய்யும் சட்ட மூலத்துக்கு ஆதரவாகத் தீர்ப்பைத் தராததால் இந்த நாட்டின் பிரதம நீதியரசரையே அச்சுறுத்தி, பதவியில் இருந்து கலைத்து விட்டு, தனது கையாளை அந்தப் பதவியில் குறுக்கு வழியில் - பின்கதவால் - கொண்டு வந்து இருத்தி அதன் மூலம் சட்டத்தை வளைத்துப் போட்டவர் இதே மஹிந்த ராஜபக்ஷதான்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அச்சுறுத்தி, பதவியில் செயற்படவிடாமல் கலைத்த பெருங்குற்றத்துக்காகத்தான் 2015 ஜனவரி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் இருந்து துரத்தினர் வாக்காளர்கள். ஜனநாயகத்தின் பெயரால் அப்போது அரங்கேற்றப்பட்ட கேலிக் கூத்து இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு பெரும் துன்பியல் நிகழ்வு.

அவரது ஆட்சிக் காலத்துடன் ஒப்படுகையில் இப்போது நீதித்துறை மிகுந்த மேன்மையுடன் செயற்படுகின்றது.

அதற்காக அவர் நீதித்துறையைப் பாராட்ட வேண்டுமே தவிர, தூற்றக்கூடாது.

# இனவாதம் பேசுவோர் அரசிலிருக்கும்வரை மக்களுக்கு சட்டம் விதிப்பதில் பயனில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் சீற்றம்



கொழும்பு, ஜூன் 30

இனவாதத்தைக் கக்கும் அமைச்சர்களை அரசில் வைத்துக்கொண்டு, பொதுமக்களுக்கு சட்டம் விதிப்பதால் எதுவுமே நடக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுஅவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டின் எல்லாத் துறைகளிலும் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அரசு அதனை வருடக்கணக்கில் பிற்போட்டு வருகிறது.

இனவாதத்தைக் கக்கும் அமைச்சர்களை அரசில் வைத்துக்கொண்டு பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் சட்டம் விதிப்பதால் எதுவும் நடக்கப் போவதில்லை.

நாட்டில், வரலாற்றில் இல்லாத அளவுக்கு டெங்கு நோய் அதிகரித்துள்ளது. வைத்திய சாலைகளில் மக்கள் கட்டில்கள் இல்லாமல் நிலத்தில் படுத்து உறங்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்கியை நிர்வகிக்க முடியாத, சுகாதார அமைச்சை நிர்வகிக்க முடியாத விருது பெற்ற நிதி அமைச்சரும் சுகாதார அமைச்சரும் இந்த நாட்டில் மட்டுமே இருக்கின்றனர் என்று தான் கூற முடியும். - என்றுள்ளது. (எ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்ற விவாதத்துக்கு!

## அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பிலான சட்டமூலம், நாடாளுமன்றத்தில், வெகு விரைவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளர்களில் ஒருவருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலான சட்டமூலம், நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால், அதற்கு அடுத்து வரும் 75 நாள்களுக்குள், மேற்படி தேர்தலை நடத்தத் தயாராக இருப்பதாக, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இந்தச் சட்ட மூலம் வெகுவிரைவிலேயே நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். - என்றார்.

இதேவேளை இது தொடர்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில் -

'இந்த விடயம் தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,



ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

மேலும், இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசித்து விரைவில் முடிவுகளை அறிவிப்போம்' - என்றார்.

# வெளிநாடுகளில் தஞ்சமடைந்தோர் அச்சமின்றி நாடு திரும்ப முடியும்

## ஆஸியில் தெரிவித்தார் அமைச்சர் மனோ

வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள மக்கள் அச்சமின்றி நாடு திரும்புவதற்கான சூழல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சகவாழ்வு, அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் மனோ, அந்தநாட்டின் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள நிலையில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்களின்போது, இலங்கையில் இன்னும் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன என்று ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

எனினும், அவ்வாறான சூழல் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும், நாடு திரும்புவோர் கடந்த காலங்களைப்



போன்று முகாம்களுக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் அமைச்சர் மனோ இதன்போது தெரிவித்துள்ளார்.

### உடற்பருமன் காரணமாக அவதானத்துக்கும் அவதிக்கும் உள்ளாகும் உறுப்புகள்

மூளை – பக்கவாதம்
இருதயம் – மாரடைப்பு
சதையி – நீரிழிவு
முழங்கால் மூட்டுக்கள் – மூட்டு வாதம்
கீழ் கால் – Varicose நாள அடைப்புக்கள்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்.மாநகரசபை.

### நாளை

01.07.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.இ 2.16 வரை
திதி: அட்டமி மு.இ 11.19 வரை

சுபநேரம் : 2.56 - 4.26 வரை
இராகுகாலம் : 8.56 - 10.26 வரை

# சகல தரப்பினருக்கும் சமமான உரிமைகளை உறுதிப்படுத்துவதே சிறந்த அரசமைப்பு!

## தென்னாபிரிக்க பிரதம நீதியரசர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 30

சகல தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடல் களை நடத்துவது என்ற உத்தியைக் கையாண்டதன் ஊடாகவே தென்னாபிரிக்காவின் அரசமைப்பை வெற்றிகரமாகத் தயாரிக்க முடிந்தது என அந்த நாட்டின் முன்னாள் பிரதி பிரதம நீதியரசர் மொசெனெகே கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான மாநாடு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரசமைப்பு கவுன்ஸில் செயலகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தென் னாபிரிக்காவின் முன்னாள் பிரதி பிரதம நீதியரசர், அரசமைப்பு தயாரிப்பில் தென்னாபிரிக்கா பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பு என்பது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அதிகாரம் செய்வதற்கான அனுமதி அல்ல. சகல தரப்பினருக்கும் சமமான உரிமைகளைஉறுதிப்படுத்துவதே சிறந்த அரசமைப்பாக இருக்கும்.

காலனித்துவ ஆட்சியிலிருந்த தென்னாபிரிக்கா சுமார் 320 வருட யுத்தத்துக்கு முகங்கொடுத்த நிலையிலேயே அரசமைப்பைத் தயாரிக்கும் பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்துவது என்பது நாம் முதன் முதலில் அடிப்படையாக முடிவுசெய்த விடயம்.

பேச்சுகள் மற்றும் பற்றிய கலந்துரையாடல்கள் முதலில் முன்னெடுக்கப்பட்டன. குழப்ப காலத்தில் ஒருவரால் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கலாம். சகல தரப்புடனும் நாம் கலந்துரையாடினோம்.

இவ்வாறு நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் ஊடாக இடைக்கால அரசமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டது. நான்கு வருட கலந்துரையாடல்களின் பின்னர் 1993 ஆம் ஆண்டு தென்னா பிரிக்காவின் இடைக்கால அரசமைப்பு வரைவு சமர்ப்பிக்கப்பட்டது.

அரசமைப்பை நாம் தயாரிக்கும்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக இருக்கவில்லை. யுத்தம் தொடர்ந்தமையால் மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களால் அரசமைப்பைத் தயாரிக்கும் சூழல் இருக்கவில்லை.

எனவே, அரசமைப்பின் சட்டபூர்வத்தன்மை குறித்தும், ஏனைய விடயங்கள் குறித்தும் மக்களுடன் பரந்துபட்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அரசமைப்பின் கொள்கைகள் பற்றி நாம் நீண்டகாலம் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தோம்.

அது மாத்திரமன்றி அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, எல்லையில் உள்ள படையினரை தக்கவைப்பது, மோசமான சட்டங்களை நீக்குவது போன்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் நாம் அப்போது முன்னெடுத்திருந்தோம்.

போதியளவு கலந்துரையாடல்களை நடத்துவது என்ற உத்தியைப் பயன்படுத்தியே அரசமைப்பை நாம் வெற்றிகரமாகத் தயாரித்திருந்தோம். பாரிய கேள்விகளுக்கு விடைதேட வேண்டிய விடயங்களில் முக்கியமான தரப்புக்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

கலந்துரையாடல்களின் போது இணக்கப்பாடு ஏற்படாத சந்தர்ப்பங்களில் பேச்சுகளை இடைநிறுத்தி விட்டு இடைவெளி எடுத்துக்கொண்டோம். நிலைமை சுமுகமானதும் மீண்டும் அது பற்றிய பேச்சுக்களை ஆரம்பித்தோம்.

இதற்கு உதாரணமாக சில விடயங்களைக் குறிப்பிடலாம். போராளிகளுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலானவர்கள் அதிகாரிகளாக இருந்தனர். அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கக்கூடாது, காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஒரு சாரார் கூறினர்.

எனினும், அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என பிறிதொரு சாரார் வலியுறுத்தினார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கலந்துரையாடல்களை நடத்தி அடிமட்டத்தில் இணங்கக்கூடியதொரு விடயத்தில் இணக்கத்தை ஏற்படுத்தி அதனை இடைக்கால அரசமைப்பில் உள்ளடக்கினோம்.

இவ்வாறான விடயங்களில் சகல தரப்பினரின் கருத்துக்களையும் கவனமாகச் செவிமடுத்து இறுதியாக இணங்கக்கூடிய எல்லையில் இணக்கத்தை ஏற்படுத்துவதே பொருத்தமான அணுகுமுறையாகும். காணிப் பிரச்சினை, சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் இந்த நடைமுறையைப் பயன்படுத்தியே தீர்வுகாணப்பட்டது.

அதேநேரம், அரசமைப்பு என்பது பெரும்பான்மையினத்தவர்கள் சிறுபான்மையினத்தவரை நிர்வகிப்பதற்கான அனுமதியோ அல்லது அங்கீகாரமோ இல்லை. சகலரும் சமமாக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்துவதாகும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

---

# புரவெசி பலய அமைப்பு விளம்பரம்; பொதுபல சேனா முறைப்பாடு!

புரவெசி பலய அமைப்பினால் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பில் பொது பல சேனா இயக்கம் முறைப்பாடு செய்துள்ளது.

பிரபல பத்திரிகை ஒன்றில் புரவெசி பலய மற்றும் நீதியான சமூகத்திற்கான அமைப்பு ஆகியன இணைந்து விளம்பரம் ஒன்றை வெளியிட்டிருந்தன.

அதற்கு எதிராக கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் இல்லாத இனவாதம் மற்றும் மதவாதம் தொடர்பில் பொய்யான தகவல்களை உள்ளடக்கி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இனங்களுக்கு இடையில் வெறுப்புணர்வைத் தூண்டி அதன் ஊடாகப் பிரபலமடையவும் இந்த அமைப்பு முயற்சிப்பதாகவும் பொதுபலசேனா குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த விளம்பரம் முழுக்க முழுக்க இனவாதத்தைத் தூண்டும் வகையிலான விளம்பரம் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து பிரபல்யம் அடையும் நோக்கில் இவ்வாறு போலியான விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

இந்த அமைப்பிற்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

# அரச அலுவலகங்களுக்குள் நுழைய பல்கலை மாணவர்களுக்குத் தடை!

கொழும்பு, ஜூன் 30

ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி செயலகம் உட்பட எந்தவொரு அரச காரியாலயத்துக்குள் நுழைவதற்கும் பொதுமக்களுக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்துவதற்கும் கொழும்பு கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான லங்கா ஜயரத்ன தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கொழும்பு கோட்டை பொலிஸார் முன்வைத்த வேண்டுகோள் ஒன்றைப் பரிசீலித்த நீதிவான் ஜனநாயக நாடொன்றில் தங்களது கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் போராட்டங்களை நடத்துவதற்கும் சகலருக்கும் உரிமையுள்ளது.

ஆனாலும், பொதுமக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதற்கு இடமளிக்கமுடியாதென்பதால் அத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிப்பதாகத் தீர்ப்பளித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக் கட்டடத்துக்குள் அத்துமீறிப் புகுந்து கலவரம் புரிந்த சம்பவத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பல் கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் உறுப்பினர்களை விடுதலை செய்யுமாறு கோரி மாணவர்களில் ஒரு சாரார் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கோட்டையிலுள்ள ஜனாதிபதி காரியாலயத்துக்குள் நுழைவதற்கு அவர்கள் முயற்சி செய்தமைக்கு எதிராக கொழும்பு கோட்டை பொலிஸார் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட பின்பே மேற்படியான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சைட்டத்தை மூடும் வரை போராட்டம் தொடரும்; இலங்கை ஆசிரியர் சங்கம் சூளுரை!

கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் மருத்துவக் கல்வித்துறையில் விஷ ஜந்தாகப் புகுந்திருக்கும் சைட்டத்தை அரசு இழுத்து மூடும் வரை தங்களது போராட்டம் தொடர்ந்தும் நடக்குமென இலங்கை ஆசிரியர் சங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் மருத்துவப் பட்டப்படிப்பின் தரம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

அதை வெறும் வியாபாரமாக்கி மருத்துவத் துறைக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ள அரசு தனது தன்னிச்சையான முடிவை எடுத்துள்ளது.

இதற்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள், மருத்துவர்கள், சிவில் அமைப்புகள், ஆசிரிய சங்கங்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் முன்னெடுக்கும் சாத்வீகப் போராட்டங்களுக்கு எதிராக அடக்குமுறையைப் பிரயோகித்து வருவது வேதனைக்குரிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# நாட்டின் பலமான சக்தியாக முஸ்லிம்கள் மாற வேண்டும்!

இந்த நாட்டின் பல மான சக்தியாக முஸ்லிம்கள் மாற வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

-இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி கடற்கரையில் புதிதாக அமைக்கப்பட்ட மெரின் றைவ் வீதியை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



**மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள்**

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் உள்ள முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இந்தப் பிரச்சினைகள் ஆட்சி மாற்றத்தின் ஊடாக ஏற்படுபவை அல்ல. அதனால், ஜனாதிபதியை மாற்றவேண்டும், அரசாங்கத்தை மாற்ற வேண்டும் எனக் கோரிக்கைவிடுத்து, முட்டாள்தனமாகச் செயற்படக் கூடாது.

உலகம்பூராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன. எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நாம் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைகள் அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

தேர்தல் வரும்போது விரும்பிய கட்சிகளை நாம் ஆதரிக்கலாம். ஆனால், அந்தத் தேர்தல் காலத்தில் நாம் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கட்சி என்று கூறி, ஒருவரை ஒருவர் விமர்சிக்க வேண்டிய அவசியம் இல்லை. முஸ்லிம் தலைமைகள் மேடைகளைப் போட்டு ஒருவரை ஒருவர் சாட வேண்டிய தேவையும் இல்லை. அனைத்து முஸ்லிம் தலைவர்களும் ஒன்றுபட வேண்டும். இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.- என்றார்.

# தமிழர்களை அடக்கி ஆள கிழக்கில் சிலர் முயற்சி!

**சுமனரத்ன தேரர் தெரிவிப்பு**



கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களை அடக்கி ஆள்வதற்குச் சிலர் திரைமறைவில் முயற்சிக்கின்றனர்.

-இவ்வாறு மட்டக்களப்பு மங்களராமய விஹாரையின் விஹாராதிபதி வண. அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது வாக்குகளை சிதறடிக்காமல், தமிழ் அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க வேண்டும். இதன் மூலமே கிழக்கு மாகாணத்தைக் காப்பாற்ற முடியும்.

யுத்த காலத்தைவிட யுத்தம் முடிந்த பின்னரே தமிழ் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் காடுகள், ஓலைக்குடிசைகள் என்பவற்றில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு தமிழ்த் தலைமைகள் முன்வருவதில்லை. -என்றார். (ச)

# பள்ளிவாசலில் நிறுத்தி இருந்த மோ. சைக்கிள் அபேஸ்!

மட்டக்களப்பு ஏறாவூரில் ஜாமிஉல் அக்பர் பள்ளிவாசலுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திருட்டுப் போயுள்ளது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் பள்ளிவாசலில் தொழுகையைமுடித்துவிட்டு வருவதற்குள் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனைஅடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கண்காணிப்புக் கமராக் காணொளியின் உதவியுடன்மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# திருமலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு!

**அமைச்சரவை அங்கீகாரம்**

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

-இவ்வாறு அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையான கொள்வனவுக் குழுவின் பரிந்துரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை ஆகியவற்றுக்கு அமையவே மேற்படி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் M/s Link Engineering தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



மட்டு. நகரில் கிழக்கிலங்கை இந்து சமய சமூக அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் சக்தி கலாமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இசைக் கருவிகள் வழங்கப்பட்டமையைப் படத்தில் காணலாம்.

# தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுகின்றன!

**கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு**

கல்லடி, ஜூன் 30

இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுகின்றன.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

கல்லடிப் பிராந்திய கால் நடைப்பயிற்சி நிலையம் நேற்று முன்திம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் யுத்தம் முடிந்த பின்னர், அபிவிருத்தித் திட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித்திட்டங்கள் ஆமை வேகத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

அனைத்து வளங்களும் உள்ள மாவட்டமாக மட்டக்களப்பு காணப்படுகின்றது. இங்கு பல குளங்கள், நீர் நிலைகள் மற்றும் விவசாய நிலங்கள் என்பன காணப்படுகின்றன.

ஆனால், அவற்றை விருத்தி செய்ய யாரும் முன்வருவதில்லை. இதனால், மக்கள் அபிவிருத்தியில் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் கால்நடை வளர்ப்பாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர். கால்நடைகள் கடத்தப்பட்டன ; சுடப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர், கிழக்கு மாகாணசபையின் ஆட்சியில் பங்குதாரர்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறியமையைத் தொடர்ந்து, இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. -என்றார். (ச)

# தேர்தல்களில் போட்டி இடுவதற்குத் தமிழ்ப் பெண்கள் முன்வர வேண்டும்!

**த.ம.வி.பு. கட்சியின் மகளிர் அணித் தலைவி தெரிவிப்பு**

தங்களுக்கான அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தமிழ்ப் பெண்கள் முன்வர வேண்டும்.

-இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி செல்வி மனோகர் அழைப்பு விடுத்துள்ளார்.

பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனான சந்திப்பு, மட்டக்களப்பில் உள்ள மேற்படி கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்ற, மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இந்தத் தேர்தல்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பெண்கள் போட்டியிட முன்வர வேண்டும். இதன் மூலம் தமது அரசியல் உரிமைகளைப் பெண்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்ப் பெண்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகள் எதையாவது செய்துள்ளார்களா என்றால், அது கேள்விக்குறியாகவே உள்ளது.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மட்டக்களப்பில் சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளன. அவர்களுக்கு உரிய முறையில் வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எவரும் முன்வருவதுமில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் பெண்கள் அரசியலில் பிரவேசம் பூச்சிய நிலையிலேயே இருந்துவருகின்றது. இந்த நிலை மாற்றமடைய வேண்டும். இதற்கு இந்த மாகாணத்தில் உள்ள அதிகளவான பெண்கள் அரசியலில் பிரவேசிக்க முன்வர வேண்டும்.- என்றார். (ச)

# பிரிக்கப்படாத நாட்டுக்குள் உச்சக்கட்ட அதிகாரப்பகிர்வு!

## பிரதமர் ரணில் கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 30

அரசமைப்பு மாற்றத்தின் மூலம், பிரிக்கப்படாத நாட்டுக்குள் கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கியுள்ளன என்றும், புதிய அரசமைப்பை உருவாக்குவதா அல்லது தற்போதுள்ள அரசமைப்பில் மாற்றங்களைச் செய்வதா என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு சபை செயலகம் கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த அரசமைப்பு, மறுசீரமைப்புக்கள் தொடர்பான மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்பொழுது நாம் முன்னெடுத்திருக்கும் அரசமைப்பு மறுசீரமைப்பு செயற்பாடு முற்றிலும் மாறுப்பட்டதாகும். அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் பட்டாலும், உச்சநீதிமன்றத்தின் முடிவுக்கு அமைய பொது வாக்கெடுப்பின் மூலமே தீர்மானம் எடுக்கப்படும்.

அதாவது, அரசமைப்பு மறுசீரமைப்பில் இறுதி முடிவை எடுப்பது நாட்டு மக்களே. சட்டத்தை அங்கீகரிக்கும் பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது.

கலந்துரையாடி அரசமைப்பு வரைவு ஒன்றைத் தயாரித்து அதனை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதே அரசமைப்பு சபையின் செயற்பாடாகும். இதற்கான செயற்பாடுகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம்.

அரசமைப்பு தொடர்பான விடயம் பொது மக்களிடம் வரவில்லையென்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது. இந்த விவகாரம் இன்னும் அரசமைப்பு சபைக்கு வரவில்லையென்பதாலேயே பொது மக்களின் நிலைப்பாடுகள் பெறப்படவில்லை.

அரசமைப்புச் சபையின் நடவடிக்கைகளை முடிவுசெய்வது வழிநடத்தல் குழுவாகும். அத்துடன் அரசமைப்பு தொடர்பான அறிக்கையொன்றை வழிநடத்தல் குழு தயாரிக்கும்.

அரசமைப்புத் தொடர்பான அறிக்கைக்கும், அரசமைப்பு வரைவுக்கும் இடையில் வித்தியாசங்கள் உள்ளன. அரசமைப்பு பற்றிய அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது என்பதிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். வழிநடத்தல் குழு ஆறு உப குழுக்களை நியமித்து அவற்றின் அறிக்கையை பெற்றிருந்தது.

தற்பொழுது இடைக்கால அறிக்கையொன்றை தயாரிக்கும் பணிகளில் வழிநடத்தல் குழு ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருந்தபோதும், ஓகஸ்ட் மாத இறுதியில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை அரசமைப்பு சபைக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான தளமாக வழிநடத்தல் குழு அமைந்துள்ளது.

சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. சகல தரப்பின் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இடைக்கால அறிக்கையை நாம் முதலில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இடைக்கால அறிக்கையில் கொள்கையளவில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

சபையில் பிரிவுகளை ஏற்படுத்தும் அறிக்கையை அனுப்ப நாம் விரும்பவில்லை. நாம் சமர்ப்பிக்கும் அறிக்கை குறித்து பொது மக்களின் கருத்துக்களையும் பெற்று அதனைச் சபையில் விவாதிக்க வேண்டும்.

இடைக்கால அறிக்கை பற்றி மக்களின் கருத்துக்களையும் பெற்று அதனை சபையில் விவாதித்த பின்னர் முழுமையான அறிக்கையை அரசமைப்பு சபையில் முன்வைத்து, விவாதித்து, அதனை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளோம். அதனைத் தொடர்ந்து அரசமைப்பு வரைவு தயாரிக்கப்படும்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. நாடு பிரிக்கப்படக்கூடாது என்பதில் சலரும் இணங்கியுள்ளனர். மாகாணங்களுக்கு அதிகூடிய அதிகாரப்பகிர்வு வழங்குவது பற்றியும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அனைத்து அரசியல் கட்சிகளும் மாகாண நிர்வாகத்தில் அனுபவத்தைப்பெற்றுள்ளன. அதிகாரப் பகிர்வு விடயத்தில் முன்னர் இருந்த பிரிவுகள் தற்பொழுது இல்லை. ஒரேயொரு பிரிவு மாத்திரமே தற்பொழுது உள்ளது. அதாவது, முதலமைச்சர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது மாத்திரமே.

அரசியல் கட்சிகளுக்கிடையில் காணப்பட்ட பிரிவினை நீங்கி, மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலேயே பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வு தொடர்பில் பிரதான கட்சிகளுக்கிடையில் சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

பௌத்த மதத்தை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கான எந்த யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. அதே நேரம், ஏனைய மதத்தவர்களும் தங்களுடைய மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பிலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

மற்றுமொரு விடயம் அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமாகும்.

இத்திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள், மாகாண சபைகளுக்கான அதிகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது பற்றி விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. செனட் சபையொன்றை உருவாக்குவதற்கு சகலரும் இணங்கியுள்ளனர். எனினும், உறுப்பினர்கள் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை.

அதேநேரம், அரசமைப்பை மேம்படுத்தும்போது பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் விடயங்களுக்குச் செல்வதா இல்லையா என்ற விடயமும் கலந்துரையாடப்படுகிறது .- என்றும் அவர் கூறினார்.

---

## ஒற்றையாட்சித் தன்மையை அரசு பாதுகாக்கும்; மகாநாயக்கர்களிடம் அமைச்சர் ரவி உறுதி!



நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை இலங்கை அரசு பாதுகாக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதியளித்துள்ளார்.

கண்டியில் கடந்த திங்கட்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

அத்துடன், நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை அரசு பாதுகாக்கும். அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை உறுதிப்படுத்தப்படும். சர்வதேச சமூகத்துடனான தொடர்புகளின் போது, இலங்கையின் அடையாளம் பாதுகாக்கப்படும் - என்றும் அவர் மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துள்ளார்.

---

## இலங்கை மத்திய வங்கியின் யாழ். பணியக செயற்பாடுகள் கிளிநொச்சிக்கு மாற்றம்!




கொழும்பு, ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய உதவிப் பணியகத்தின் செயற்பாடுகள், கிளிநொச்சி அறிவியல் நகரில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் 15ஆம் திகதி தொடக்கம், யாழ்ப்பாணத்தில் இருந்த, மத்திய வங்கியின் பிராந்திய உதவிப் பணியகத்தின் செயற்பாடுகள் அனைத்தும், கிளிநொச்சியில் உள்ள அறிவியல் நகரில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய உதவிப் பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட, ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள், மத்திய வங்கி வெளியீடுகளை விற்பனை செய்யும் பிரிவு, நிதி மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும், கிளிநொச்சி பிராந்தியப் பணியகத்துக்கு மாற்றப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## 233 பேரின் உயிரை பலியெடுத்த ரயில்!

கொழும்பு, ஜூன் 30

கடந்த ஆறு மாதங்களில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 233 ஆக அதிகரித்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலங்களில் சட்டத்தை மீறி ரயில்பாதை ஊடாக பயணித்த 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என, ரயில்வே பாதுகாப்பு இராணுவ அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

ரயில் கடவை மூடியிருக்கும் போதும் வீதி ஊடாக பயணிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. சமிக்ஞை விளக்கு எரியும் போதும் ரயில் வீதி ஊடாக பயணித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மின்சாரசபை ஊழியர்கள் பணிநிறுத்தத்துக்கு முஸ்தீபு

கொழும்பு, ஜூன் 30

தமது முக்கிய கோரிக் கைகள் சிலவற்றை முன் வைத்து மின்சாரசபை ஊழியர்கள் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்று இலங்கை மின்சாரசபை தொழிற்சங்க பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை நடத்திய பொதுப் பேரவை கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் உரிய தீர்வை வழங்காத பட்சத்தில் 48 மணித்தியால தொடர்ச்சியான பணிநிறுத்த போராட்டத்தில் மின்சாரசபை ஊழியர்கள் ஈடுபட உள்ளனர் என்று அவர் எச்சரித்துள்ளார். (எ)

## தினசரி ராசி பலன் 30.06.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 16 ஆம் நாள் ஸப்தமி திதி மாலை 6மேணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: உத்தரம் இரவு 8.15 மணி வரை. பின்னர் அத்தம். சித்தாமிர்தயோகம் முழுவதும்.ராகு காலம்: பகல் 10.39மணி முதல் 12 -14மணி வரை. சுப நேரம் மாலை 5.58 மணி முதல். இன்று ஆனி உத்தரம். திவசம் செய்யவேண்டியதிதி. ஆனி மாத வளர்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு. உத்தரம். திவசம் செய்யப்பட வேண்டிய திதி ஆனி மாத வளர்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இனிமையான நாள். வருமானம் அதிகரிக்கும். உறவினர்களின்வருகைகளிப்பை அதிகப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சிகள், வருமான அதிகரிப்புகள் உண்டாகும்.

**ரிஷபம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வங்கி, நிதி வசதிகள் கிடைக்கும். முதலீடுகள் லாபம் தரும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்தங்கள் நன்மை தரும்.

**மிதுனம்:** யோசனையான நாள். செலவுகள் அதிகரிப்பால். கவலை, யோசனை அதிகரிக்கும். வியாபாரத்தில் பெரும் நஷ்டமுண்டாகும். தொழிலில் திடீர் நெருக்குதல் களால் அவதிப்பட நேரிடும்.

**கடகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் இருப்பினும் செலவும் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு தொழில் மிக மோசமாகப் பதிப்புறும். பயணங்களைத் தவிர்ப்பது நன்று.

**சிம்மம்:** உயர்வான நாள். வருமானம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவப்பதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**துலாம்:** கவலையான நாள் ஆகும். வருமானம் குறையும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகும். உடல்நிலை பாதிப்புறும். தொழிலில் பிரயாசைக்கேற்ப வருமானம் குறையும்.. வீண் அலைச்சல் உண்டாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள்.

**விருச்சிகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. வேலை தேடுவோருக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். திருமண காரியங்கள் சாதகமான முடிவைத் தரும்.

**தனுசு:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். மூதாதையர் சொத்து வந்து சேரும். பிரிந்திருந்த குடும்பங்கள் மீண்டும் இணைவார்கள்.

**கும்பம்:** குழப்பமான நாள். வியாபாரிகள் புது முயற்சிகளில் இறங்கி, உள்ளதையும் இழக்க வேண்டி வரும். தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் குறையும்.

**மீனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு நன்மைதரும். தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.

**சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் கால்களில் பிறந்தோர் சுப கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# இலங்கையருக்கான தொழில்வாய்ப்பை அதிகரிக்க தென்கொரியா இணக்கம்

## அந்த நாட்டின் விசேட பிரதிநிதி ஜனாதிபதியிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

இலங்கை தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு கோட்டாவை அதிகரிப்பது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்று தென் கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை தலைவர் பேராசிரியர் பார்க் யங் பம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் அவர் சந்தித்தார்.

இதன்போது விவசாயத் துறையில் உள்ள இலங்கை தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புக் கோட்டாவை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு தொடர்பில் ஜனாதிபதி வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர்களின் செயலாற்றுகை மற்றும் வினைத்திறன் தொடர்பில் கொரிய தொழில் வழங்குநர்கள் திருப்தியடைந் துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் தலதா அத்துகோறளை, கொரிய குடியரசின் தூதுவர் வொன் சாம் சேன்ங் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் ராஜ் ஒபேசேக்கர ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# கிளிநொச்சியில் 9 குளங்களில் வேகமாகக் குறைகிறது நீர்மட்டம்

## சிக்கனமாக நீரைப் பயன்படுத்த வேண்டுகோள்



கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சியால் நீரப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 9 குளங்களிலும் நீர் மட்டம் மிகவேகமாகக் குறைவடைந்து வருகின்றது. இதனால் விவசாயிகள் மட்டுமல்லாது, பலர் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். எனவே நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய வறட்சி காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 6அடி 2 அங்குலமாகவும் கல்மடு 7 அடி 2 அங்குலமாகவும், அக்கராயன்குளம் 13 அடி 3 அங்குலமாகவும் கனகாம்பிகைக் குளம் 6அடி 3 அங்குலமாகவும்-கரியாலை நாகபடுவான் குளம் ஒரு அடி, 5 அங்குலமாகவும், பிரமந்தனாறு குளம் 5அடி 3 அங்குலமாகவும், புதுமுறிப்புக்குளம் 13 அடி 4 அங்குலமாகவும், வன்னேரிக் குளம் 5அடி ஒரு அங்குலமாகவும் குடமுருட்டிக் குளம் ஒரு அடியாகவும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் நீரை மிகச் சிக்கனமாகப் பயிர்ச் செய்கைகளுக்கு பயன் படுத்த வேண்டும்.

இரணைமடுவின் கீழ் 890 ஏக்கரிலும் அக்கராயான்குளம், புதுமுறிப்புக்குளம், வன்னேரிக்குளம் ஆகியவற்றின் கீழ் ஐம்பது வீதத்திலும் சிறுபோகச் செய்கைகள் மேற்கொள்ள வேண்டும். இந்த வறட்சி எமது மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளில் மாத்திரமல்லாது, ஏனைய மீன்பிடி மற்றும் சகல செயற்பாடுகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.-என்றார். (எ)

# போலி நாணயத்தாள்களுடன் பொலிஸாரிடம் சிக்கினர் ஐவர்

கொழும்பு, ஜூன் 30

போலி நாணயத்தாள்களுடன் ஐவரை மதுகம பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளைப் பயன்படுத்தி மதுபானத்தை கொள்வனவு செய்ய முற்பட்ட வேளை, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வசம் இருந்து ஐயாயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் 12, கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து, அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவருக்கு அந்த நாணயத்தை வழங்கிய நால்வர் தொடர்பில் தகவல் தெரியவந்தது.

இதன்படி, 127 போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மதுகம, குப்புக்கெடே மற்றும் வெரலபனாதர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அவர்களை இன்று மதுகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் தாய்லாந்தின் வர்த்தகக் கண்காட்சி

தாய்லாந்தின் வர்த்தக கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

தாய்லாந்தின் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பு திணைக்களத்தால் இந்த வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. வர்த்தக வாய்ப்புக்களை ஏற்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

அராலி உலோலைச் சிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தினரால் நாளை சனிக் கிழமை இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட வுள்ளன.

மேற்படி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தினரின் அனுசரணையுடன் கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் கடந்த மாதம் 27 ஆம் திகதி கண்பரிசோதனை முகாம்நடத்தப்பட்டது. அதில் மூக்குக்கண்ணாடிகள் தேவையெனப் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கே கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

உலோலைச்சிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவர் வி.செல்வரத்தினத்தின் இல்லத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. கண்பரிசோதனை செய்தவர்கள் நேரம் தவறாது சமுகம் தந்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir
வெள்ளிக்கிழமை 30.06.2017



# ஊடகவியலாளர்கள் மீதான சித்திரவதைக்கு நீதி கிட்டுமா?

இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளரான போத்தல ஜயந்த எட்டு ஆண்டுகளுக்குமுன்னர் வெள்ளை வானில் தான் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விவரிக்கிறார். இவர் பின்னர் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்திருந்தார். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் வெள்ளை வானில் கடத்தப்பட்டு பல மணி நேரங்கள் அந்த வானிற்குள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளானார் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான சித்திரவதைகளின் போது இவரது இரண்டு கால்களின் எலும்புகள் உடைக்கப்பட்டன. இவரது விரல்கள் நொருக்கப்பட்டுள்ளன. இவருக்கு சூடு வைக்கப்பட்டது. இவரது தாடி மற்றும் தலைமுடி போன்றன வெட்டப்பட்டன. இவரது வாய்க்குள் பொருள்கள் திணிக்கப்பட்டன. இவ்வளவு சித்திரவதைகளின் பின்னர் இவர் வெள்ளைவானிலிருந்து வீதியோரத்தில் தூக்கி வீசப்பட்டிருந்தார்.

பின்னர் முச்சக்கரவண்டி சாரதிகள் சிலர் வீதியில் வீசப்பட்டிருந்த போத்தல ஜயந்தவைக் கண்டனர். பின்னர் இவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பல பத்தாண்டுகால உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்த போதிலும் ஜயந்தவின் வழக்குடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. தற்போது இலங்கைக்குத் திரும்பி வந்துள்ள ஜயந்த தனக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரி வழக்குத் தொடுத்துள்ளார். ஆனால், இவருக்கான நீதி விரைவில் கிடைக்குமா என்பது சந்தேகமே.

தற்போது 52 வயதாகும் ஜயந்த, இலங்கையிலுள்ள உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக பணியாற்றியிருந்தார். இந்தச் சங்கம் இந்த நாட்டின் ஊடகவியலாளர்களின் மிகப் பெரிய அமைப்பாகும். ஜயந்த இந்த அமைப்பின் தலைவராக இருந்த போது ஊடக அடக்குமுறைக்கு எதிராக தனது கருத்துக்களை வழங்கியிருந்தார். அத்துடன், அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வழங்கினால் ஆபத்து ஏற்படும் என்பதைத் தெரிந்து கொண்ட போதிலும் ஜயந்த ஊடக அடக்குமுறைக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டப் பேரணிகளை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

தன்னைக் கடத்தியவர்கள் யார் என்பது ஜயந்தவிற்குத் தெரியாது. ஆனால், முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலராகப் பணியாற்றியவருமான கோட்டாபய ராஜபக்ஷவே தன் மீது கோபம் கொண்டிருந்தார் என ஜயந்த தெரிவித்தார். ராஜபக்ஷவிற்கு எதிராக ஊடகங்களில் விமர்சனங்கள் வெளியிடப்பட்டமையே இதற்கான காரணம் எனவும் ஜயந்த தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் ஆட்சியில் பல ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்டனர். ஆனால், ஊடகங்களுக்கு எதிரான வன்முறைகளில் தான் ஈடுபடவில்லை என ராஜபக்ஷ மீண்டும் மீண்டும் தெரிவித்திருந்தார். போரின் போது இலங்கை அரசால் இலக்கு வைக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் சரியான எண்ணிக்கை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.



வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போதும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளிலும் பல எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக இவர்கள் இலங்கை இராணுவத்தினர், அரசுக்கு ஆதரவான குழுக்கள் அல்லது புலிகள் அமைப்பால் கொல்லப்பட்டனர் எனக் குற்றம் சுமத்தப்படுகிறது.

அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் மார்ச் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் - கடந்த கால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதாக வாக்குறுதியளித்து நாட்டின் அதிபராக மைத்திரிபால சிறிசேன ஆட்சிப்பீடம்



கடுமையாகப் பாதிக்கப்பட்ட போத்தல ஜயந்த

ஏறிய பின்னரும் - இவ்வாறான ஊடக அடக்குமுறைகள் மற்றும் பல் வேறு மீறல்கள் இடம்பெறுகின்றன எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது பல்வேறு சாட்சியங்களைத் திரட்டியுள்ளது. பல்வேறு சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்த பின்னர் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்று பிரித்தானியா மற்றும் சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்த 46 இலங்கைத் தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்களைக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சாட்சியங்களை வழங்கிய தமிழர்கள் இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் வெள்ளை வானில் கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்ட காலப் பகுதியில் இவர்கள் தாக்கப்பட்டனர்.

இவர்களின் மலவாசல்களில் முட்கம்பிகள் செருகப்பட்டன. புலிகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட இடங்களைக் காண்பிக்குமாறு கோரியே தம் மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டன எனப் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் மீறல்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் நீதியை எட்டவில்லை. ஒரு சில உயர் மட்ட வழக்குகள் மாத்திரமே நீதிமன்றுகளில் விசாரணை செய்யப்படுகின்றன. ஆனாலும் அவையும் மிகவும் மெதுவாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

ஊடகவியலாளர் ஜயந்த கடத்தப்படுவதற்கு ஒரு சில மாதங்களின் முன்னர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ஊடவியலாளர் கீத் நொயார் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஆறு இராணுவத்தினர் கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்விரு ஊடகவியலாளர்களும் வெள்ளைவான்களில் கடத்தப்பட்டிருந்தனர். சித்திரவதைகளின் பின்னர், ஊடகவியலாளர் நொயார் ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியிருந்தார்.

இவ்வாறான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்குவதில் சிறிசேன அரசு தயக்கம் காண்பிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றவாளிகள் இலங்கை இராணுவத்தை அல்லது ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களாவர். இலங்கையில் புதிய ஆட்சி ஏற்பட்டதன் பின்னர், தனது வழக்குத் தொடர்பாக இலங்கை காவற்துறைக்கும் இலங்கை அதிபரால் நியமிக்கப்பட்ட இழப்பீட்டு ஆணைக்குழுவிற்கும் கடிதம் எழுதிய போதிலும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என ஜயந்த தெரிவித்தார்.

குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இலங்கை இராணுவ வீரர்களைக் கைதுசெய்வதைத் தான் எதிர்க்கிறார்கள் என அதிபர் சிறிசேன வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். "போர்க் கதாநாயகர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் எனக்கூறுவது வேடிக்கையானது. இவ்வாறான அறிக்கைகளை வெளியிடும் போது, நீங்கள் விசாரணையாளர்களுக்கு என்ன செய்தியைக் கூறுகிறீர்கள்?" என நேர்காணல் ஒன்றின் போது ஜயந்த வினவியிருந்தார்.



"இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்ட இராணுவத்தினரைத் தண்டிப்பதன் மூலம் இலங்கை இராணுவம் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்" என ஊடகவியலாளர் ஜயந்த தெரிவித்தார்.

ஜயந்தவின் சொந்த இடமான மிரிஹானவில் காவற்துறை அதிகாரி ஒருவர் இவரைக் கடத்திய வெள்ளை வானின் இலக்கத்தைக் கூறுமாறு கேட்டிருந்தார். ஆனால், வாகனத்தின் இலக்கத்தைத் தன்னால் பார்க்க முடியவில்லை என ஜயந்த கூறினார். கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூன் 20ஆம் திகதி) ஜயந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சென்றிருந்தமையுடன் உள்ளூர் காவற்துறையிடமிருந்து தன் தொடர்பான விசாரணையை



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைப் பொறுப்பேற்குமாறும் கோரியிருந்தார்.

இதன் பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பொலிஸ் மா அதிபர் ஜயந்தவின் வழக்குத் தொடர்பாக விளக்கியிருந்தார். இதன்பின்னர் ஜயந்தவிடம் புலனாய்வாளர்கள் இரண்டு நாள்களுக்கு மேல் விசாரணை மேற்கொண்டனர்.

தற்போது ஜயந்தவின் வழக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரிக்கப்படுகிறது. ஆனாலும், விரைவில் தீர்வு கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இராணுவத்தினர் ஒத்துழைக்காததால் நீதிமன்றங்களால் விரைவாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை என ஊடகச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

எந்தவொரு வெள்ளை வானைப் பார்க்கும் போதும் தான் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார் எனவும் இவ்வாறான வடுவுடன் வாழ்வதை விட இறந்திருக்கலாம் என சில வேளைகளில் தான் நினைக்கிறார் எனவும் ஜயந்த தெரிவித்தார். உடைந்த தனது கால் எலும்புகளைப் பொருத்துவதற்காக உலோகத்தகடுகள் வைக்கப்பட்டுள்ளன எனவும் இது மிகவும் வேதனையைத் தருவதாகவும் அமெரிக்காவில் குளிர் காலநிலையின் போது இந்த வலியை தான் அதிகம் உணர்ந்தார் எனவும் ஜயந்த தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகின்ற போதிலும் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்களை நீதியின் முன்நிறுத்துவதற்கு அரசு இழுத்தடிப்பதாக உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தற்போதைய தலைவர் லசந்த றுகுணுஜ் தெரிவித்தார்.

"நாங்கள் அதிருப்தியடைந்துள்ளோம். இரண்டு ஆண்டுகளாக விசாரணையை மேற்கொள்ளுமாறு நாங்கள் அதிபர் செயலக ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்து வருகிறோம். குற்றவாளிகள் சமூகத்தில் சுதந்திரமாகத் திரிகிறார்கள். இதனால், இந்த நாட்டில் ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு உங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது" என றுகுணுஜ் தெரிவித்தார்.

ஜயந்த கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் அமெரிக்கத் தூதுவர் வைத்தியசாலையில் சென்று இவரைப் பார்வையிட்டார். அமெரிக்காவில் தங்குவதற்கான வசதிகளையும் வழங்கியிருந்தார். முதலில் இதனை ஜயந்த மறுத்திருந்தார். ஆனாலும், தொடர்ந்தும் சில மாதங்களாக அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டதால் அமெரிக்காவிற்குச் செல்வதென ஜயந்த தீர்மானித்தார். தற்போது ஜயந்த அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றுள்ளார்.

12 வயதில் இலங்கையை விட்டு வெளியேறிய ஜயந்தவின் மகள் தற்போது நியூயோர்க்கில் பொறியியல் துறையில் கற்கிறார் எனவும் இவர் பொறியியலாளர் பட்டத்தைப் பெற்று வெளியேறிய பின்னர் இலங்கையில் மீண்டும் பணிபுரியத் திட்டமிட்டுள்ளார் எனவும் ஜயந்த தெரிவித்தார்.

நன்றி: புதினப்பலகை




பொன்.வேணு கிருஷ்ணா

**அமெரிக்க கருவூலத்தால் அறிவிக்கப்பட்ட மேலும் ஒருதலைப் பட்சமான அமெரிக்க நடவடிக்கைகளையே ஐ.நா. பொருளாதாரத் தடைகள் பின்பற்றின**

வடகொரிய ஆயுதத் திட்டங்களை ஆதரிப்பதாக கூறப்பட்ட இரண்டு ரஷ்ய நிறுவனங்களுடன் மூன்று தனி நபர்களும் உட்பட, ஒன்பது தனியார் நிறுவனங்களையும், அரசாங்க நிறுவனங்களையும் கறுப்பு பட்டியலில் சேர்க்க வகைசெய்த, அமெரிக்க கருவூலத்தால் அறிவிக்கப்பட்ட மேலும் ஒரு தலைப்பட்சமான அமெரிக்க நடவடிக்கைகளையே ஐ.நா. பொருளாதார தடைகள் பின்பற்றின.

சீனாவின் பொருளாதாரச் செல்வாக்கைச் சுரண்டுவதற்கு ஏதுவாக, வட கொரியா அதன் அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களைக் கைவிடுமாறு வலியுறுத்த ட்ரம்ப் நிர்வாகம் சீனாவின் மீது பெரும் அழுத்தத்தைக் கொடுத்தது. வட கொரியாவின் உயர் மட்ட ஏற்றுமதி பொருளாக இருக்கும் வட கொரிய கனிமங்களின் கொள்முதல் அளவிற்கு தடைவிதிப்பதாகவும், நிலக்கரி இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதாகவும், ஐ.நா.வின் முந்தைய பொருளாதாரத் தடைகள் முடக்கம்தரும் பொருளாதார அபராதங்களைச் சுமத்தியது. இருப்பினும், பீஜிங், எண்ணெய் மற்றும் உணவுப் பொருள்கள் விநியோகத்தை வெட்டுவது போன்ற கூடுதல் நடவடிக்கைகளினால், பியோங்யாங்கில் தூண்டப்படும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை வொஷிங்டன் சுரண்டுமென அஞ்சி அவற்றை நிறைவேற்ற தயங்கு கிறது.

ஐ.நா.விற்கான அமெரிக்கத் தூதரான நிக்கிஹாலே பாதுகாப்புச் சபையில் பேசுகையில், வடகொரியா அமெரிக்க கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை என்றால் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுக்கும் ஒரு மெல்லிய மறைமுகமான அச்சுறுத்தலை மீண்டும் விடுத்தார். ஒரு அமைதியான, ''இராஜதந்திர தீர்மானத்தை நாடுவதில் பேச்சளவில் கவனம் செலுத்தும் போதும், அவர் பின்வருமாறு எச்சரித்தார்: இராஜதந்திர மற்றும் நிதியியல் விளைவுகளுக்கு அப்பால், தேவைப்பட்டால் வடகொரிய ஆக்கிரமிப்பை மற்ற வழிகளில் எதிர்க்க அமெரிக்கா இன்னும் தயாராகவுள்ளது.''

**''அணுசக்தி பிரச்சினைக்கான சாத்தியத்தின் ஒரு முக்கிய சாளரம்''**


ஐ.நாவிற்கான சீன தூதர் லீயு ஜீய், வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைக்கான பீஜிங்கின் அழைப்பு, பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காணப்பட வேண்டிய ''அணுசக்தி பிரச்சினைக்கான சாத்தியத்தின் ஒரு முக்கிய சாளரம்'' அங்கு இருப்பதாக மீண்டும் மீண்டும் அறிவிக்கிறார். ''அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்'' என்று அவர் வலியுறுத்துவதுடன், தென்கொரியாவில் கண்டம்



விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை எதிர்ப்பு பாட்டரியான ஒரு முனைய அதிஉயர பகுதிப் பாதுகாப்பினை (Terminal High Altitude Area Defence - THAAD) நிறுவுவதை நிறுத்துமாறு அமெரிக்காவுக்கு அழைப்பு விடுத்தார்.

ஆசியாவில் அமெரிக்க இராணுவ கட்டியெழுப்பலானது முதன்மையாக வடகொரியா மற்றும் அதன் மட்டுப்படுத்தப்பட்ட அணுஆயுதக் களங்களை நோக்கமாகக் கொண்டதில்லை என்பதைப் பீஜிங் நன்கு அறிந்துள்ளது. சீனாவுடனான அணுஆயுதப் போருக்கான அமெரிக்க இராணுவத் திட்டமிடலின் ஒரு பகுதியாகத்தான், ஆசிய பசுபிக்கில் பென்டகனின் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள ஏவுகணை எதிர்ப்பு அமைப்பின் ஒரு அம்சமாகவே இந்த THAAD அமைப்பு உள்ளது. சீன முக்கிய நிலப்பகுதிகளை ஆழ்ந்து ஆராயவும், எந்த வொரு ஏவுகணைத் தொடக்கத்துக்கும் மேம்பட்ட திறனுள்ள எச்சரிக்கையை விடுக்கவும் THAAD நிறுவுதலுடன் தொடர்புடைய அதிநவீன X - band ரேடார் தகுதிவாய்ந்ததாக உள்ளது.

குறிப்பாக, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் சர்ச்சைக்குரிய THAAD செயற்பாட்டின் ஓர் இடைநிறுத்தலுக்கு அழைப்பு விடுத்தார். ஏற்கனவே இருக்கும் இரண்டு THAAD ஏவுகணை எதிர்ப்பு பாட்டரிகள் அப்படியே இருக்கக்கூடும், ஆனால், கூடுதல் நான்கு பாட்டரிகளின் ஸ்தாபிதங்கள் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டை சார்ந்திருக்கும், எனவே அதற்கு பல மாதங்கள் ஆகலாம் என்று அவரது அலுவலகம் தெரிவித்தது. தென்கொரியாவின் சமீபத்திய ஜனாதிபதித் தேர்தலின் போது, மூன் தன்னை ஒரு எதிர்ப்பாளராக காட்டிக் கொண்டதன் மூலமாக THAAD குறித்த பரவலான எதிர்ப்பைச் சுரண்டினார், ஆனால், உடனடியாக அதனை அகற்றுவதற்கு அழைப்பு விடுப்பதை குறுகிய



காலத்திற்குள் நிறுத்திக் கொண்டார். முன்மொழியப்பட்ட இடைநீக்கம் அமெரிக்க யுத்த தயாரிப்புகளுக்கு ஒரு அடியாக இருந்ததோடு, அது வொஷிங்டனில் ஒரு எதிர் வினையை சந்தேகமின்றி தூண்டுவதாகவும் இருக்கும்.

**பொருளாதாரத் தடைகள் அதன் அணு ஆயுத வலிமையை ''ஒரு நிமிடம் கூட'' நிறுத்த முடியாது என்று பியோங்யாங் கூறியது.**

வட கொரியா ஐ.நா. பொருளாதாரத் தடைகளை கண்டனம் செய்ததுடன், இந்த நடவடிக்கைகள் தொடர்பான சீனாவின் ஆதரவைத் தாக்குவதன் மூலமாக, அதனுடன் அதிகரிக்கும் வளர்ந்துவரும் உடைவை அடிக்கோடிட்டுக் காட்டியது. வொஷிங்டனும், பீஜிங்கும், பாதுகாப்புச் சபையின் மூலமாக, ''தங்கள் சொந்த நலன்களை பின்தொடர்வதில் ஒரு உயர்மட்ட மற்றும் தன்னிச்சையான நடவடிக்கையாக, சர்வதேச நீதியை அவமதித்து'' ஒரு தீர்மானத்தை ''நிறைவேற்றியுள்ளனர்'' என்று ஒரு வெளியுறவு அமைச்சரின் செய்தித் தொடர்பாளர் அறிவித்தார். பொருளாதாரத் தடைகள் அதன் அணு ஆயுத வலிமையை ஒரு நிமிடம் கூட நிறுத்த முடியாது என்று பியோங் யாங் கூறியது.

இரண்டு ரஷ்ய நிறுவனங்களை கறுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கான அமெரிக்க கருவூலத்தின் முடிவானது, வடகொரியாவிற்கும், சீனாவிற்கும் இடையிலான உறவுகளைச் சீர்கெடுக்கும் விதமாக பியோங்யாங் உடனான கூட்டுக்களை மாஸ்கோ ஊக்குவிக்கக் கூடாது என்ற வகையிலான ஓர் எச்சரிக்கையாகவே அது தோன்றுகிறது. ரஷ்யாவிற்கும், வட கொரியாவிற்கும் இடையிலுள்ள வர்த்தக மற்றும் போக்குவரத்துத் தொடர்புகளை எடுத்துக்காட்டும் அமெரிக்க ஊடகங்களில் கட்டுரைகள் வெளிப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 73 சதவிகிதம் அதிகரித் துள்ளதாக USA Today இந்தவாரம் மதிப்பீடு செய்துள்ளது. ரஷ்ய நிறுவனம் ஒன்று மே மாதம் வடகொரிய துறைமுக நகரமான ரஜீனுக்கு புதிய பயணப்படகு பாதை ஒன்றை ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் அது தெரிவிக்கிறது. மேலும், ரயில் இணைப்புக்களை மேம்படுத்துவது, மற்றும் வடகொரிய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பை விரிவுபடுத்தும் விதமாக ரஷ்யாவின் மரம் மற்றும் கட்டுமானத் தொழில்களில் அவர்களை மலிவு உழைப்புத் தொழிலாளர்களாக்கும் ஒரு உடன்படிக்கையை மேற்கொள்வது போன்றவை தொடர்பான பேச்சுவார்த்தைகள் குறித்தும் அது குறிப்பிடுகிறது. எனினும், கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, சீனாவுடனான வடகொரியாவின் வருடாந்தர வர்த்தகம் 6.6 பில்லியன் டொலராக (6.6 billion) இருப்பதோடு ஒப்பிடுகையில், ரஷ்யாவுடனான அதன் வருடாந்தர வர்த்தகம் வெறும் 130 மில்லியன் டொலர் (130 million) மதிப்பிலானதாகவே உள்ளது.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீடசி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் பதிவாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

19



அத்தியாயம் - II

## அமைப்புக்குள் பிரச்சினைகள்

பாலாவும் நானும் விடுதலைப் புலித் தலைவர்களுடனும் போராளிகளுடனும் ஒரு நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டோம். அமைப்பின் உயர் மட்டத்தில் நிலவிய மிக அந்தரங்கப் பிரச்சினைகளை எமக்குத் தெரிவிக்கும் அளவுக்கு அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆனோம். இந்த வரலாற்றுக் காலகட்டத்தில் தமிழ் சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப உறுப்பினர்கள் மத்தியில் அதிகாரப் போட்டிகளும் ஆளுமை மோதல்களும் எழுந்தமையால் இயக்கத்தில் பிளவு தோன்றி, மாற்றங்கள் நிகழ்ந்து, இறுதியில் உறுதியான வளர்ச்சி ஏற்பட்டது. மூத்த தலைவர்களுக்கும் மத்திய குழுத் தலைவர் உமா மகேஸ்வரனுக்கும் இடையே பாரதூரமான ஒரு முரண்பாடு எழுந்தது. அமைப்பிலே ஒரு தவிர்க்க முடியாத பிளவு ஏற்படும் நிலை தோன்றியது. அறிவுரை ஆலோசனைக்காக பாலா சென்னைக்கு அழைக்கப்பட்டார். நெருக்கடியின் அப்பட்டமான காரணம், அமைப்பின் ஒழுக்கக் கோவையை மீறும் ஒரு பாலியல் விவகாரமாக இருந்தது. ஒடுக்கப்பட்ட தமது மக்களுக்கு விடுதலை பெற வேண்டும் என்ற உயரிய சீலத்தைச் சாதிக்கும் நோக்கத்தை ஏற்று, அதற்காகத் தம்மை அர்ப்பணித்த உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பின் கட்டுப்பாட்டுக்கும் கண்ணியத்துக்கும் ஒழுக்கக் கோவை இன்றியமையாதது. இந்த ஒழுக்கக் கோவையை மீறுபவர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், திருமணமாகாத மனிதரான உமா மகேஸ்வரன், விவாகரத்துப் பெற்றவரும் விடுதலைப் புலி அமைப்பின் ஆரம்பகால உறுப்பினருமான ஊர்மிளாவுடன் பாலியல் உறவை வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டார்.

உமாவும் ஊர்மிளாவும், தொடக்கத்திலே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) இன் இளைஞர் அணித் தலைவர்களாக இருந்தவர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலகப் பரப்புரையை விரிவுபடுத்துவதற்காக, பிரபாகரனால் சேர்க்கப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் ஏனைய போராளிகளுடன் சென்னையில் ஒரு வீட்டிலே வசித்து வந்தார்கள். உமாவையும், ஊர்மிளாவையும் பாலியல் உறவு நிலையில் நேரே கண்ட போராளிகள் விடயத்தைத் தலைமைப்பீடத்துக்கு அறிவித்திருக்கிறார்கள். இதற்காகத்தான் பிரபாகரனும் ஏனைய தலைவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து விடயத்தை விசாரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அமைப்பின் ஒழுக்கக் கோவையின் படி, திருமணத்துக்கு புறம்பாகவோ, திருமணத்துக்கு முன்னதாகவோ பாலியல் உடல் உறவுகள் தடை செய்யப்பட்டிருந்தன. ஒரு விரிவான விசாரணை நடைபெற்றது. ஊர்மிளாவைத் திருமணம் செய்ய வேண்டும்; அல்லது மத்திய குழுத் தலைமையில் இருந்து விலக வேண்டும் என்று உமாவிடம் தெரிவிக்கப்பட்டது. ஏனைய போராளிகளை விட, உமா உலக நடைமுறைகள் தெரிந்த ஒரு மனிதர். தங்களிடையே தகாத உறவு இருப்பதை வன்மையாக மறுத்தார். பதவியிலிருந்து விலகவும் மறுத்தார். இது அமைப்புக்குள் ஒரு பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்தது. ஊர்மிளாவும் அதேயளவு பிடிவாதமாக இருந்தார். உறவை ஒப்புக்கொள்ள மறுத்தார். இது தொடர்பாக ஆலோசனை கூற பாலா அழைக்கப்பட்டார். உமாவுடனும் ஊர்மிளாவுடனும் பாலா பேசினார். அவர்கள் இருவரும் தமது உறவை ஒப்புக்கொண்டு பின்னொரு நாளிலேனும் திருமணம் செய்யச் சம்மதித்தால், பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று பாலா கருதினார். ஆனால், அவர்கள் இருவரும் தாம் சுத்தவாளிகள் என்றே தொடர்ந்து வாதிட்டார்கள். ஆனால், சம்பவம் நடந்ததாகக் கண்டவர்களும் தங்கள் கூற்றில் உறுதியாக நின்றார்கள். இறுதியாக, பெரும்பான்மையான தீர்ப்பு அந்தச் சோடிக்கு எதிராகவே அமைந்தது. மகேஸ்வரன் தமது பதவியிலிருந்து இறங்கி, இயக்கத்தில் இருந்து விலக வேண்டும் என்று தீர்மானம் ஆயிற்று. தீர்ப்பை மகேஸ்வரன் திட்டவட்டமாக நிராகரித்தார். இதன் விளைவாக, இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார். உமா மகேஸ்வரனும் ஊர்



மிளாவும் வவுனியாவுக்குத் திரும்பிச் சென்றார்கள் என்றும், அங்கு ஊர்மிளா மஞ்சள் காமாலையால் பீடிக்கப்பட்டு, கடுஞ்சுகவீனம் அடைந்து மருத்துவக் கலாநிதி ராஜசுந்தரம் நடத்திய மனித காருண்ய அமைப்பான காந்தி இல்லத்தில் காலமானார் என்றும் பின்னர் அறிந்தோம்.

இயக்கப் பிரச்சினைகள் பாராதூரமாக இருந்தபோதும், எமது இந்திய முதல் பயணம் தொடர்பான இனிய நினைவுகளோடு லண்டன் திரும்பினோம். விடுதலைப் புலி இயக்கத் தலைமையுடன் எமக்கு நல்ல புரிந்துணர்வு இருந்தது. அவர்கள் மட்டில் அனுதாபமும் இருந்தது. ஆயினும், அமைப்பை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக வளர்த்து எடுப்பதானால், அதற்கான அரசியல் பணி நிறையப் புரியப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்து இருந்தோம். இது ஆரம்ப காலம். சிறு விதையில் இருந்து தான் பெருவிருட்சம் முளைக்க வேண் டும். ஆகவே, நாம் தளர்வு அடையவில்லை. போராட்டத்துக்காகக் கஷ்டப்பட நாம் தயாராக இருந்தோம். எம்மைப் பொறுத்த வரையிலே விடுதலைப் புலிகளே தமிழ் மக்களுக்குக் கிடைத்த சிறந்த வாய்ப்பு என்றும் உணர்ந்து கொண்டோம்.


லண்டனில் இருந்த வேளையில் தலைமையோடு தொடர்பைப் பேணியபடியே அமைப்புக்காகத் தீவிரமாக உழைத்தோம். இரண்டு ஆண்டுகள் கழிய, 1981 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகச் சென்னைக்குச் சென்றோம். திரும்பவும் அமைப்புக்குள் பாரதூரமான பிரச்சினைகள் காணப்பட்டன. இந்தக் காலகட்டத்திலேயே பிரபாகரன் தமிழீழ விடுதலை அமைப்புடன் (TELO) கூட்டு ஒன்றை நிறுவினார். அந்தவேளை சிறீசபாரத்தினம் ரெலோவின் தற்காலிகத் தலைவராக இருந்தார். ரெலோவைத் தோற்றுவித்த தலைவர்கள், தங்கதுரையும் குட்டிமணியும் சிறிலங்கா அரச படைகளால் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதச் சட்டத்துக்கு அமைவாக சிறிலங்காச் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்கள். பின்னர் விடுதலைப் புலிகளையும் ரெலோவையும் ஒரே அணிக்குள் கொண்டு வந்து, ஆயுதப் போராட்டத்தைப் பலப்படுத்தி விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் தாமே என்று உமா மகேஸ்வரன் வஞ்சகமாக உரிமை பாராட்டத் தொடங்கியிருந்தமையால் இணைப்புத் தடைப்பட்டது. ஆயுதப் போராட்ட வரலாறு விடுதலைப் புலிகளின் கொடியின் கீழேயே பதியப்பட வேண்டும் என்பதில் பிரபாகரனும் அவருடைய போராளிகளும் அக்கறையாக இருந்தார்கள்; விடுதலைப் புலிகளின் தலைமை தமதே என்று உமா மகேஸ்வரன் விடுத்த உரிமைப் பாத்தியதையை எதிர்த்தார்கள். விடுதலைப் புலிகளும் ரெலோவும் அந்தச் சந்தர்ப்பத்திலே இணைந்த ஓர் அமைப்பாக வடிவெடுத்தால், விடுதலைப் புலிப் பெயரையும் தலைமையையும் தமதாக்கிக்கொள்ள அது மகேஸ்வரனுக்கு வாய்ப்பாக இருந்திருக்கும். ஆகவே, மகேஸ்வரனின் பிரச்சினையைத் தீர்க்கும் வரை, தங்கள் அமைப்பைக் குலைத்துவிட புலிகளின் மூத்த தலைவர்கள் விரும்பவில்லை. எனவே, மகேஸ்வரனுடைய உரிமைப் பாத்தியதையை நிர்மூலமாக்கும் வரை ஒன்றிணைந்த அமைப்பை உருவாக்குவதைத் தாமதப்படுத்த வேண்டும் என்றும் அதே சமயம் புலிகளையும் ரெலோவையும் தனித்தனியே பலப்படுத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது. இந்த இணைப்பை ஒத்திப்போடுவதை சிறீசபாரத்தினம் விரும்பவில்லை. ஆனாலும், அந்தத் தீர்மானத்தின் பின்னே இருந்த நியாயத்தை அவர் புரிந்து கொண்டார். இதற்குப் பின்னர் பாலாவும் பேபி சுப்பிரமணியமும் ஒரு பலமான ஊடகப் பரப்புரையைச் சென்னையிலே தொடக்கினார்கள். உமா மகேஸ்வரனின் தவறான உரிமைக் கோரிக்கையை நிராகரித்தார்கள். அதேசமயம் உலகம் பூராகவும் உள்ள விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்குக் கடிதங்கள் அனுப்பபட்டன. உமா பதவி இறக்கப்பட்ட காரணம் கடிதங்களில் விளக்கப்பட்டது. இறுதியில், விடுதலைப் புலிகளின் தலைமைக்கான கோரிக்கையை உமா மகேஸ்வரன் கைவிட்டார். தனியான போராளி இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்தார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. ஆனால், இதே காலகட்டத்தில் வெவ்வேறு வளர்ச்சிகள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகள் - ரெலோ இணைப்பு கைகூடவில்லை.

(தொடரும்...)

# அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்!














**வடக்கு மாகாண சபையின் கடிதத் தலைப்பில் 22.06.2017 திகதியிட்டு கம்பியூட்டரில் தட்டச்சுச் செய்த இந்தக் கடிதம் மாகாண சபை உறுப்பினர் ஒருவரால் எழுதப்பட்டது எனத் தெரிவித்து அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் அஞ்சல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. இது அனுப்பப்பட்ட கடித உறையில் புதுக்குடியிருப்பு தபாலக முத்திரை இடப்பட்டிருந்தது.**

**'கௌரவ முதலமைச்சர், வடக்கு மாகாண சபை' என்று முகவரியிடப்பட்ட இந்தக் கடிதம் 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்' என்ற தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எழுதியவர் பெயர் குறிப்பிடப்படாமல் அநாமதேயமான கடிதமாக இது இருந்தாலும் அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் கவனிக்கத்தக்கவை என்பதால் இங்கு பிரசுரமாகின்றது.**

கௌரவ முதல்மைச்சர்
வடக்கு மாகாண சபை,

ஐயா, ஏற்கனவே மனது வேதனைப்பட்டிருக்கும் உங்களை மேலும் வேதனைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இதனை எழுதவில்லை, எனது மனதில் ஏற்பட்டுள்ள வேதனையினாலும் மனக் குழப்பங்களாலுமே இதனை எழுதுகின்றேன்.

இன்று மாகாண சபை அமர்வில் அவைத் தலைவரின் அறையில் உட்காராது தனியாக நூலக அறையில் போய் உட்கார்ந்து கொண்டீர்கள். ஏன் இந்த விதண்டாவாதம்? மாகாண சபையின் இன்றைய அலங்கோல நிலைக்கு அவைத் தலைவர் ஒரு காரணம் என்றால் நீங்களும் ஒரு காரணம் தான். இந்தப் பிரச்சினையை இவ்வளவு சிக்கலுக்குள் தள்ளியதில் உங்களுக்கும் பங்குண்டு என்பதே நடு நிலையாளர்களது கருத்தாக இருக்கிறது.

விசாரணை அறிக்கை வந்தவுடனேயே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரையும் அழைத்து அதைப் படிக்கத் தந்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திருக்காதே. அந்த அறிக்கையில் பெரும் குற்றங்கள் எவையும் அமைச்சர்கள் செய்தார்கள் என்று இல்லாத போது அவர்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் பெரும்பாலான உறுப்பினர்கள் சொல்லியிருப்போம்.

அமைச்சர்கள் தன்னிலை விளக்கம் அளித்ததன் பின்பு உறுப்பினர்களின் கருத் தையும் கேட்ட பின்புதானே நீங்கள் ஒரு முடிவு எடுப்பதாக அறிவித்தீர்கள். ஆனால், முன்னமே எழுதிக் கொண்டு வந்ததை வாசித்ததை எந்த வகையில் ஒரு நீதியரசரான நீங்கள் நியாயப்படுத்தப் போகிறீர்கள்?

அதற்கு முன்பே எங்களைத் தொலைபேசியில் நீங்கள் தொடர்பு கொண்டு இரண்டு அமைச்சர்களை மட்டுமா அல்லது நான்கு அமைச்சர்களையுமா பதவி நீங்குவது என்று கேட்டீர்கள். நாங்கள் அப்படி நீங்குவதானால் நான்கு அமைச்சர்களையும் நீக்குங்கள் என்று தானே சொல்ல முடியும். நீங்கள் இரண்டு அமைச்சர்களையும் நீக்க வேண்டுமா என்ற ஒரு கேள்வியை ஏன் எங்களிடம் கேட்கவில்லை? கேட்டிருந்தால் தேவை இல்லை என்று நாங்கள் சொல்லி இருப்போம் என்ற நினைப்பில் தானே நீங்கள் கேட்கவில்லை.

உங்களது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே பிழையான தீர்ப்பு என்று தெரிந்தும் இரு அமைச்சர்களையும் பதவியைத் தியாகம் செய்யுமாறு கேட்டிருந்தீர்கள். அதைச் சமப்படுத்துவதற்காக மற்றைய இரண்டு அமைச்சர்களை விசாரணை முடியும் வரை விடுப்பில் செல்லுமாறு கேட்டீர்கள்.

இப்போது உங்களுக்கு ஆதரவாக கையெழுத்திட்ட எல்லாரிடமும் 'பயோடேற்றாவை' அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கிறீர்கள். அமைச்சுப் பதவிக்காக உறுப்பினர்களிடையே மோதலை ஏற்படுத்தும் விதமாகவே இது இருக்கப் போகிறது. எங்களுடைய உறுப்பினர்களும் அமைச்சுப் பதவிக்காக முண்டியடித்துக் கொண்டு தரத் தொடங்கி விட்டார்கள். உண்மையில் அநியாயமாகப் பதவி பறிக்கப்பட்டவர்களின் கதிரையில், பதவி ஆசை காரணமாக அமர்வது மனச்சாட்சிக்குவிரோதமானது. இரண்டு அமைச்சர்களுமே தங்களுக்கு இழைக்கப்பட்டது அநியாயம் என்று கூறி மீள் பரிசீலிக்குமாறு கேட்டுள்ள போதும், அவசரம் அவசரமாக நீங்கள் 'பயோடேற்றாவைக்' கேட்டது பிழையாக இல்லையா?

உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்கள். ஒரு தவறைச் செய்து விட்டு அதை நியாயப்படுத்துவதற்காக மீண்டும் மீண்டும் நீங்கள் பிழை விடுவதாகவே எல்லோரும் கூறுகிறார்கள். அமைச்சுப் பதவிகளை மாத்திரம் நீங்கள் பிடுங்கவில்லை. அந்த இரண்டு பேரையும் சமூகத்தின் மத்தியில் உயிரோடு கொலை செய்து விட்டீர்கள். அரசியல் பிழைத்தவர்களுக்கு அறமே காலன், அதனால் தான், பதவியை ராஜினாமாச் செய்யச் சொல்லி நீங்கள் கேட்ட உடனேயே உங்களைக் கவிழ்ப்பதற்கான முயற்சியும் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் இறைவன் செயல்.

ஐயா, மற்றைய இரண்டு அமைச்சர்கள் கூட உங்கள் விசாரணையில் குற்றவாளிகளாகமாட்டார்கள். அவர்களும் எந்தத் தவறும் செய்திருக்கமாட்டார்கள். பிறகு அமைச்சரவை மாற்றம் என்று உறுப்பினர்களிடையே பிரிவை ஏன் ஏற்படுத்த வேண்டும்? இரண்டு அமைச்சர்களினும் தன்னிலை விளக்கங்களை மீளாய்வு செய்வது தானே ஒரு நீதியர்சரின் முடிவாக இருக்க முடியும்.? தயவு செய்து இருக்கின்ற இரண்டு அமைச்சர்களையும் நீக்குகின்ற பிடிவாத முயற்சியில் இறங்க வேண்டாம். பதவியை ராஜினாமாச் செய்த அமைச்சர்களுக்குப் பதிலாகப் புரிய அமைச்சர்களையும் தேட வேண்டாம். இருக்கின்றது இன்னும் கொஞ்சக் காலம். தனிப்பட்ட அரசியல்வாதிகளைவிட மக்களே முக்கியம். பழைய அமைச்சரவையைத் தொடர விடுங்கோ.

சபை உறுப்பினர்கள் எல்லாரையும் கூட்டி எல்லாரினதும் நிலைப்பாட்டையும் கேளுங்கள்.

இப்படிக்கு
மனச்சாட்சி உறுத்தும் மாகாண சபை
உறுப்பினர்.

பிரதி:- கௌரவ அவைத் தலைவர்
கௌரவ அமைச்சர்கள்
கௌரவ மாகாண சபை
உறுப்பினர்கள்.

# இளைஞர்களின் தொழிற்பிரச்சினைக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி வழங்கும்!

## உறுதியளித்தார் பிரதம நிறைவேற்று அதிகாரி




இலங்கையில் இடம் பெற்ற கடந்த 35 வருடகால போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு இளைஞர்களின் தொழில் இல்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தேவையான உதவிகளைத் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லிபீயூஸ் சொக்குபோவா தெரிவித்தார்.

தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிற் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடை பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற போர்காலச் சூழ்நிலையின் பின்னர் மாவட்டங்களை அபிவி ருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் முக்கியமாக இந்த தொழிற்பயிற்சி வழங்கப் பட்டதைக் கருதமுடியும்.

இந்தச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வை ஒரு முக்கிய நிகழ்வாக நான் கருதுகின்றேன்.

இந்தப் பயிற்சிகள் மூலமாக அந்தப்பகுதி இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டுபட்டுள்ளது.

சந்தைகளில் கேள்விகள் உள்ள பயிற்சி நெறிகள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தொழிற் பயிற்சிகளை இளைஞர், யுவதிகளுக்கு வழங்கி வேலைவாய்ப்பு சந்தைக்கு கொண்டு செல்லும் செயற்றிட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து தனது உதவிகளை வழங்கும்.

தொழில் வாய்ப்புகள் திறமையில் தங்கியுள்ள விடயமாகவுள்ளது. திறமைகள் உள்ளவர்களுக்குத் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தத் தடைகளும் இருக்கப் போவதில்லை.

திறமைகள் இல்லாதவர்களும் அந்தத் திறமைகளைப் பெற்று ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.- என்றார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபை இதற்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றன. (எ)

## மாணிக்க கற்களுடன் சீனப்பெண்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 30


சீனாவில் இருந்து சட்ட விரோதமாகக் கடத்திவரப்பட்ட 35 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்கள், தங்க ஆபரணங்கள் மற்றும் சிகரெட்டுகளுடன் இரண்டு சீனப் பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவின் கும்ஹெங் பிரதேசத்தில் இருந்து அவர்கள் இதனைக் கடத்தி வந்துள்ளனர்.

28 மற்றும் 35 வயதான சீனப் பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்குக்கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அந்தப் பெண்களை தாம் கைது செய்தனர் எனப் பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக்கிரம பஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.மாநகர சபையின் வடக்கு, கிழக்கு மாகாண தொழிற் சங்க 43 ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு





யாழ்ப்பாணம், ஜூன் 30


யாழ்.மாநகர சபையின் வடக்கு, கிழக்கு மாகாண தொழிற் சங்கத்தின் 43 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக் கூட்டமும் நேற்று முன்தினம் தலைவர் ஆறுமுகம் வரிங்டன் தலைமையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான என். விந்தன் கனகரட்ணம், அரியகுட்டி பரஞ்சோதி, யாழ். மாநகர சபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் மற்றும் யாழ். மாநகரசபைப் பொறியியலாளர் வேலுப்பிள்ளை நடராஜா இராஜவரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை வட பிராந்திய ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத் தலைவர் அற்புதம் உதயகுமார், யாழ். மாநகரசபை சாரதிகள் சங்கத் தலைவர் சின்னராசா விஜயகுமார், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க வடமாகாண செயலாளர் முத்துவேலு சிவசண்முகராசா மற்றும் யாழ். மாநகரசபை மேற்பார்வையாளர் சங்கத் தலைவர் இரத்தினம் அசோகன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஓய்வு பெற்ற யாழ்.மாநகர சபை ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை வடமாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணத்தால் வழங்கப் பட்டது.

தொடர்ந்து 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. இதன்போது சங்கத்தின் போசகராக வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணமும், தலைவராக ஆறுமுகம் வரிங்டனும் மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து ஏனைய நிர்வாகிகள் தெரிவில் உபதலைவராக செ. கஜிதரன், செயலாளராக இ. பிரசாத், உபசெயலாளராக சி.ராஜ்குமார், பொருளாளராக த.இன்பராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (எ)




உலகம் எங்கும் பரந்து வாழ்கின்ற இந்து மக்களுக்கு முழுமுதற்பொருளாக இருந்து, இந்த உலகையும் மக்களையும் காத்து வருகின்றார் சிவபெருமான். அத்தகைய சிவனுக்கு உகந்த நாள்களில் ஒன்றாக ஆனி உத்தரம் உள்ளது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த சிவபெருமானுக்கு வருடத்தில் ஆறு விசேட அபிஷேகங்கள் நடைபெறுவதுண்டு. இந்த நாள்கள் அபிஷேகத்துக்கும் சிவதரிசனத்துக்கும் உகந்த நாள்களாகச் சொல்லப்படுகின்றன. அதில் ஆனி உத்தரம் மிகச்சிறப்பு வாய்ந்தது.

இதில் ஆனி மாதம் சஷ்டித் திதியும் சேர்ந்த ஆனி உத்தர தரிசனம் மிகச் சிறப்பு மிக்கது என ஆகமங்களில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. முருகன் அலங்காரப் பிரியன் என்பது போல் சிவன் அபிஷேகப் பிரியன் ஆவார்.

நாம் சிவபெருமானது திருவருளைப்பெற அவரது மனம் குளிர்வதற்காக அபிஷேகங்களை சிவாலயங்களில் செய்ய வேண்டும். இவற்றுடன் வருடத்தில் சிவனுக்கு அபிஷேக தினங்களாகவும் தரிசன காட்சியாகவும் உள்ள தினங்களில் தவறாது அதிகாலை சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்யவேண்டும். இதனால், இப்பூவுலகில் கிடைத்தற்கரிய சகல பாக்கியங்களையும் பெற்று இன்புற்று வாழலாம் என புராணங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

# வட்டு.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம் வட்டு. மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரி அதிபர் திருமதி பு. பஞ்சாட்சரம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனும், சிறப்புவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசாவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நிறுவுனர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக கல்வியியல்துறை முன்னாள் பேராசிரியர் மா. சின்னத்தம்பி வழங்குவார்.

# காதல் தொல்லை கொடுத்த பெரியாம்பிக்கு செருப்பால் எறிந்து ஏசினார் வித்தியா!

## அரச சாட்சியமாகிய சுரேஷ்கரன் நேற்று மன்றில் தெரிவிப்பு

-எஸ்.நிதர்ஷன்-

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கினை விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட 3 நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல்அட் பார் மன்று நேற்று இரண்டாவது நாளாகவும் கூடியது.

அரசு தரப்பில் வழக்கை பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் குமார்ரட்ணம் மற்றும் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர்.

இவ்வழக்கு ஆரம்பிக்கப்பட்டதும் வழக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட பின்னர் அரசசாட்சியாக மாறியுள்ள உதயசூரியன் சுரேஷ்கரன் சாட்சியப் பதிவுக்காக அழைக்கப்பட்டார்.

திறந்த மன்றில் பிரதி சொலிஸிஸ்ர் ஜெனரல் குமார்ரட்ணத்தின் கேள்விகளுக்கான பதிலாக அவர் தனது சாட்சியத்தை பதிவு செய்திருந்தார்.

### சாட்சியப் பதிவு

எனது பெயர் உதயசூரியன் சுரேஷ்கரன் (வயது 29). புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் வசித்து வருகின்றேன். புங்குடுதீவு மாகாவித்தியாலயம், கணேசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்திருந்தேன.

திருமணமாகி எனக்கு ஒரு பெண் பிள்ளை உள்ளது. பிறந்ததில் இருந்தே புங்குடுதீவில் வசித்து வந்த நான், தொழில் நிமித்தம் கொழும்புக்குச் சென்றிருந்தேன்.

அங்கு 10 வருடங்கள் கடை ஒன்றில் வேலை செய்து வந்தேன். இதன் பின்னர் பாதை திறந்ததும் மீண்டும் புங்குடுதீவுக்கு வந்தேன். வித்தியா உயிரிழந்த சம்பவம் எனக்குத் தெரியும்.

### வித்தியாவைத் தெரியும்

வித்தியா எங்கள் ஊரைச் சேர்ந்தவர். வீரமலை என்னும் இடத்தில் வசித்து வந்தார். வித்தியா இடம்பெயர்ந்து மீண்டும் புங்குடுதீவு வந்த காலப் பகுதியில் இருந்து குறிப்பாக இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பே வித்தியாவை எனக்குத் தெரியும்.

வித்தியா புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். வித்தியாவின் குடும்பத்தில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா ஆகியோர் இருந்தனர். அக் குடும்பத்தின் கடைசிப் பிள்ளைதான் வித்தியா. ஆனால் அவள் எத்தனையாம் ஆண்டில் கல்வி கற்றார் என்று எனக்குத் தெரியாது.

### வித்தியாவிற்கு காதல் தொல்லை

வித்தியா உயிரிழப்பதற்கு இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர் அவளை நேரில் கண்டுள்ளேன். அவள் தொடர்பான காதல் விடயமும் எனக்குத் தெரியும்.

வித்தியாவை காதல் செய்தவரை ஊரில் பெரியாம்பி என்று தான் சொல்லுவார்கள். பெரியாம்பி வித்தியாவைக் காதல் செய்தது எனக்குத் தெரியும். வித்தியா இறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் நான் பெரியாம்பியின் காதலுக்கு உதவி செய்தேன்.

உதவி என்றால் வித்தியாவை அவர் பார்க்கப் போகும் போது அவருடைய மோட்டார் சைக்கிளில் ஏறி நானும் செல்வேன்.

வித்தியா பாடசாலைக்குச் செல்லும் போதும், வீடு திரும்பும் போதும் கூடுதலாகப் பெரியாம்பியுடன் வித்தியாவைப் பார்ப்பதற்காகச் செல்வோம். காலையில் 7.30 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலும், மாலையில் 2.30 மணிக்கும் 3 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலும் வித்தியாவைப் பார்க்கச் செல்வோம். மோட்டார் சைக்கிளில் தான் செல்வோம். பெரியாம்பி வாங்கிய புது மோட்டார் சைக்கிளில் செல்வோம். பெரியாம்பி தான் மோட்டார் சைக்கிளை ஓட்டுவார். நான் பின்னால் இருப்பேன்.

பெரியாம்பியின் காதலை வித்தியா ஏற்கவில்லை. அவளுக்கு பெரியாம்பியைப் பிடிக்கவில்லை. பெரியாம்பி சில நேரங்களில் வித்தியாவுடன் கதைப்பதற்கு முயற்சிப்பார். ஆனால் வித்தியா பெரியாம்பியுடன் கதைப்பது இல்லை. பெரியாம்பியைத் தன்னுடன் கதைக்க வேண்டாம் என்றும் வித்தியா பேசியுள்ளார்.

''நீங்கள் கதைப்பதைக் கண்டால் அண்ணா பேசுவார், அண்ணா அடிப்பார்'' - என்றும் வித்தியா பெரியாம்பிக்குச் செல்லியுள்ளார்.

இவ்வாறு ஒருநாள் ஆலடிச் சந்தியில் வைத்து பெரியாம்பிக்கு வித்தியா செருப்பால் எறிந்து பேசினார். செருப்பால் எறிந்ததும் பெரியாம்பி மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு போய்விட்டார். இச் சம்பவம் வித்தியா இறப்பதற்கு சுமார் ஒன்றரை அல்லது ஒரு மாதத்திற்கு முன்னர் நடைபெற்றது.

இச் சம்பவம் நடைபெற்ற பின்னர் ''வித்தியாவிற்கு பிடிக்கவில்லை அவளைவிட்டுவிடு'' - என்று நான் பெரியாம்பிக்குச் சொன்னேன்.

### கடத்தலுக்காக ஒன்று சேர்த்தது எப்படி?

நான் தினமும் காலையில் இருந்து பின்னேரம் வரைக்கும் கள்ளுக் குடிப்பது வழமை. புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் உள்ள மாப்பிள்ளை என்பவருடைய வீட்டிற்குச் சென்று அங்குவைத்தே கள்ளுக் குடிப்பேன்.

பெரும்பாலும் தனியாகத் தான் நான் கள்ளுக் குடிப்பதற்குப் போவேன். பின்னர் அங்கு வருபவர்களுடன் ஒன்றாக இருந்து கள்ளுக் குடிப்பேன். பெரியாம்பியும் அங்கு கள்ளுக் குடிக்க வருவார்.

கொழும்பில் இருந்து வந்த சந்திரராசு, சசி, கண்ணா, பெரியாம்பி போன்றவர்களுடன் சேர்ந்து கள்ளுக்குடித்தோம்.

இதன் பின்னர் ஒருநாள் வித்தியாவின் வீட்டிற்கு பெரியாம்பியுடன் சேர்ந்து நானும் சென்றேன். நான் கடற்கரையில் நின்றுவிட்டேன். பெரியாம்பி தான் வித்தியாவின் வீட்டிற்குச் சென்றார். சிறிது நேரத்தில் வந்த பெரியாம்பி, வித்தியாவின் வீட்டில் யாரும் இல்லை என்று சொன்னார். உடனே திரும்பிச் சென்றுவிட்டோம்.

மீண்டும் ஒருநாள் நானும், பெரியாம்பியும், சந்திரராசுவும் போய் மாப்பிள்ளை வீட்டில் கள்ளுக் குடித்தோம். அப்போது புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் ரவியும், தவக்குமாரும் அங்கு கள்ளுக் குடிப்பதற்காக வந்தார்கள்.

அங்கு வைத்து பெரியாம்பி தனக்கு வித்தியா செருப்பால் எறிந்து விட்டாள் என்று சொல்லி ரவியுடன் கதைத்துக் கொண்டிருந்தார். ரவி பெரியாம்பியிடம் கேட்டார் ''நீ வித்தியாவை லவ் பண்ணுறியா?'' - என்று. அதற்கு பெரியாம்பி ''ஆம்'' என்றார்.

''லவ்வுக்கு உதவி ஏதும் தேவை என்றால் சொல்லு, செய்து தரலாம், (வித்தியாவை கடத்திக் கொடுப்பது)'' - என்று ரவி பெரியாம்பிக்கு சொன்னார். பெரியாம்பியும் சொல்கிறேன் என்றார்.

வித்தியாவைக் கடத்திக் கொடுப்பது தொடர்பாக ரவி பேசும் போது என்னுடன் சேர்ந்து 6 பேர் அங்கிருந்தோம்.

பின்னர் இரண்டு, மூன்று நாள்களுக்குப் பின்னர் ரவியைக் கண்ட பெரியாம்பி, வித்தியாவைத் தூக்கித் தரமுடியுமா? ஏன்று கேட்டார். பெரியாம்பி கேட்கும் போது நானும், ரவி, தவக்குமார், மாப்பிள்ளை, சசி என 7 பேர் அங்கு நின்றோம்.

வித்தியாவைக் கடத்திக் கொடுப்பதற்கு ரவி ஓம் என்று சொன்னார். காசு தந்தால் வித்தியாவைத் தூக்கித்தருவதாகச் சொன்னார்.

சம்பளம் வந்ததும் காசு தருவதாக பெரியாம்பி சொன்னார். சொன்னது போல் 20 தொடக்கும் 23 ஆயிரம் ரூபா பணத்தை பெரியாம்பி ரவியிடம் கொடுத்து, வித்தியாவைத்தூக்கித்தருமாறு கேட்டார். காசு கொடுக்கும் போது நாங்கள் அனைவரும் நின்றோம்.

காசை வாங்கிய ரவி இரண்டு மூன்று நாள்களில் வித்தியாவை கடத்தித் தருவதாகக் கூறிவிட்டுப் போனார். - என்றார்

இதற்கு மேல் மன்றில் சாட்சியம் வழங்கினால் எனது குடும்பத்திற்கு ஆபத்து என்று கூறி சாட்சி திறந்த மன்றில் தொடர்ந்து சாட்சியமளிக்க மறுத்துவிட்டார்.

## வித்தியா...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வழக்கு நேற்று இரண்டாவது நாளாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் - அட் பார்' ஆயத்தின் முன்னால் விசாரணை செய்யப் பட்டது.

இந்த வழக்கிற்காக மூன்று நீதிபதிகள் ஆயம் யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள பிரத்தியேக இடத்தில் நேற்றுக் காலை மீண்டும் கூடியது.

இவ்வழக்கை அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் குமார் ரட்ணம், அரச சட்டத்தரணி நாகரட்னம் நிஷாந்தன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

நேற்று இவ்வழக்கில் சாட்சியமளிப்பதற்காக 5 ஆவது சாட்சியான உதயசூரியன் சுரேஷ்கரன் அழைக்கப்பட்டார்.

திறந்த மன்றில் தனது சாட்சியத்தை வழங்க ஆரம்பித்த அவர், வித்தியா எவ்வாறு கடத்தப்பட்டு, சீரழிக்கப்பட்டார், யார், யார் இணைந்து இச்சம்பவத்தை நிறைவேற்றினர் என்ற தகவல்களை திறந்த மன்றில் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்திருந்தார்.

திறந்த மன்றில் அத்தகவல்களைச் சொன்னால் தனது தாயார் மற்றும் சகோதரிக்கு ஏதும் ஆபத்து நேரும் என்றும் அவர் மன்றில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த 3 நீதிபதிகளில் ஒருவரான மா.இளஞ்செழியன் "சட்டமா அதிபர் உமக்கான பொது மன்னிப்பை வழங்குவதற்குத் தீர்மானித்ததற்கான காரணம் நீர் மன்றில் சாட்சியத்தை வழங்குவதாக அவருக்கு ஒப்புதல் அளித்தமையினாலேயே. எனவே, நீர் மன்றில் சகல தகவல்களுடன் அடங்கிய சாட்சியத்தை வழங்க வேண்டும். சாட்சியத்தைப் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை. அதனை நீதிமன்றம் செய்யும். ஊர்காவற்றுறைப் பொலிஸாரைக் கொண்டு உமது குடும்பத்திற்கான பாதுகாப்பு வழங்கப்படும். எனவே, சாட்சியத்தை அச்சமின்றிப் பதிவு செய்யலாம்." - என்றார்.

நீதிபதி மா.இளஞ்செழியன் அது தொடர்பான கட்டளை ஒன்றை விடுப்பதற்கும் முயன்றார்.


இருப்பினும், கட்டளை விடுப்பதற்கு முன்பு ஏனைய நீதிபதிகளுடன் அவர் கலந்தாலோசனை செய்தார். பின்னர் வழக்கின் எதிரி தரப்பு சட்டத்தரணிகளுடனும் நீதிபதிகள் கலந்தாலோசனை செய்தனர்.

இக் கலந்தாலோசனையின் முடிவில் மன்றிலிருந்து ஊடகவியலாளர்களையும், பார்வையாளர்களையும் தற்காலிகமாக வெளியேறுமாறு மன்று பணிப்புரை விடுத்தது.

ஊடகவியலாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் சாட்சியப் பதிவு மிக நீண்ட நேரமாகத் தொடர்ந்து நடைபெற்றது. (உ)

## அமைச்சராகப் பதவியேற்ற அனந்தி கிளி. போராட்டத்திற்கு விரைந்தார்

### காணாமற்போனோரின் உறவுகளுடன் முதற் சந்திப்பு



வடக்கு மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக நேற்றுப் பதவியைப் பொறுப்பேற்ற திருமதி அனந்தி சசிதரன் பதவியேற்பு நிறைவடைந்தவுடன், கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் அவரது முதலாவது மக்கள் சந்திப்பாக இது அமைந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி அவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பித்த போராட்டம் நேற்று 129 ஆவது நாளாகவும் இடம்பெற்றது.

காணாமற்போனோரின் வயது முதிர்ந்த பெற்றோர், மனைவியர், பிள்ளைகள், சுற்றத்தார், நலன் விரும்பிகள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்று வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று வடக்கில் புதிய அமைச்சராகப் பொறுப்பேற்ற அனந்தி சசிதரன் கிளிநொச்சிக்குச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் உரையாடினார். தானும் காணாமற்போனவரின் மனைவி என்ற ரீதியில் இவ்வாறான பல போராட்டங்களில் பங்கேற்றமையை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விடயத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் அவர்களின் வெளிப்படுத்தல் தொடர்பில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

அத்துடன், புலம்பெயர் நாடுகளுக்கும் சென்று இந்த விடயம் தொடர்பில் பேசவுள்ளார் எனவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் பங்கேற்றார். (மு)

காலைக்கதிர்



## சோமாலியாவில் கடும் வறட்சி:

# 20 ஆயிரம் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம்!

சோமாலியாவில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாகக் குறைந்தது 20 ஆயிரம் குழந்தைகள் பட்டினியால் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என சிறுவர் பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் இரண்டு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து 'சேவ் தி சில்ரன்' புதிய ஆய்வு ஒன்றை நடத்தியது. இதில் பஞ்சத்தால் ஏற்பட்டுள்ள ஊட்டச்சத்துக் குறைபாட்டால் அங்கு வாழ்கின்ற குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனால், இந்த நாட்டுக்கு உயிர் காக்கும் உதவிகளை வழங்க வேண்டும் என சர்வதேச சமூகத்தை சிறுவர் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் கோரியுள்ளது.



சிறுவர்பாதுகாப்புத் தொண்டு நிறுவனத்தின் சோமாலிய நாட்டு இயக்குநரான ஹசன் நூர் சாதி கூறுகையில்–

''உணவுப் பஞ்சம் மற்றும் ஊட்டச்சத்தற்ற குழந்தைகளின் நிலைமை என்பன பெரும் கவலை அளிக்கின்றன.

சர்வதேச சமூகம் சோமாலியாவுக்கு உயிர் காக்கும் உதவிகளை வழங்க வேண்டும். 2011 ஆம் ஆண்டு 2 லட்சத்து 50 ஆயிரம் மக்களை பட்டினியால் சோமாலியா இழந்தது. அந்த நிலைமை இம்முறையும் நிகழ வாய்ப்புள்ளது ''– என்று தெரிவித்துள்ளார்.

சோமாலியாவில் கடுமையான வறட்சியின் காரணமாக

### சிறுவர் பாதுகாப்பு அமைப்புத் தெரிவிப்பு

தட்டம்மை பரவலால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என ஐ.நாவின் குழந்தைகள் முகாமை கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், இந்த எச்சரிக்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 6 முஸ்லிம் நாடுகளுக்கு அமெ. புதிய விசா கட்டுப்பாடு!


அமெரிக்காவால் பயணத்தடை விதிக்கப்பட்ட ஆறு முஸ்லிம் நாடுகள் மற்றும் அனைத்து அகதிகளுக்கும் புதிய விசா கட்டுப்பாடுகளை வெள்ளை மாளிகை விதித்துள்ளது.

மேற்படி விசா விண்ணப்பதாரிகள் அமெரிக்காவில் நெருங்கிய உறவினர்களை அல்லது வணிக பிணைப்புகளை கொண்டிருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

ஆறு முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்குள் வர முடியாதவாறு ஜனாதிபதி ட்ரம்பினால் விதிக்கப்பட்ட பயணத்தடை உத்தரவை, பகுதியளவில் நடைமுறைப் படுத்த அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதனைத் தொடர்ந்தே புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (ச)

## இஸ்ரோவின் ஜிசாட் – 17 செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தம்!



கெய்னே, ஜூன் 30

இந்திய நிறுவனமான இஸ்ரோவின் ஜிசாட்–17 செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

லத்தீன் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவில் இருந்து ஏரியன் ராக்கெட் மூலம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.29 மணிக்கு இந்த செயற்கைக்கோள் விண்ணில் பாய்ந்தது. இதனை அடுத்து, ஜிசாட்–17 செயற்கைகோள் வெற்றி கரமாக விண்ணில் நிலைநிறுத்தப் பட்டுள்ளது. தொலைத்தொடர்பு, (DTH) சேவை மேம்பாட்டுக்காக ஜிசாட்–17 செயற்கை கோளை, ஏரியன்–5 ராக்கெட் மூலம் இஸ்ரோ அனுப்பியது.

அதிக நிறை கொண்ட இந்த ஜிசாட்–17 செயற்கைக் கோளை அனுப்புவதற்கான மேம்பட்ட தொழில்நுட்ப அமைப்பு இன்னும் இஸ்ரோ ஏவுதளத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. இதனால், பிரெஞ்ச் கயானாவிலிருந்து ஜிசாட்–17 செயற்கைகோள் செலுத்தப்பட்டது.

ஜிசாட்–17 செயற்கைகோள் 3 ஆயிரத்து 477 கிலோ நிறை கொண்டது. இதன் ஆயுள் காலம் 15 ஆண்டுகள். இது இந்தியாவின் 18 ஆவது தொலைத்தொடர்பு மேம்பாட்டுச் செயற்கை கோள் என்பது குறிப்பிடத்தக்கது.



## கிழக்குச் சிரியாவில் விமானத் தாக்குதல்!

### 30 பொதுமக்கள் சாவு

கிழக்குச் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அல்–டப்லான் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சுமார் 30 பொதுமக்கள் உயிரிழந்தனர் என சிரிய மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை மேற்படி தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டணியும், ரஷ்யாவின் ஆதரவுடனான சிரிய இராணுவமும் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், மேற்படித் தாக்குதல் யாரால் முன்னெடுக்கப்பட்டது என்பது அடையாளம் காணப்படவில்லை என கண்காணிப்புக் குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அல்–மயாதீன் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகளால் சிறையாகப் பயன்படுத்தப் பட்டுவரும் ஒரு கட்டடத்தின் மீது அமெரிக்க கூட்டணி கடந்த திங்கட்கிழமை நடத்திய விமானத் தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பெற்ற மகனையே தாய்க்கு உணவாகக் கொடுத்த ஐ.எஸ்.

சிரியாவில் பாலியல் அடிமையாக உள்ள யாஷ்டி பெண் ஒருவருக்கு, ஐ.எஸ். தீவிரவாதிகள் அவரது மகனையே உணவாகச் சமைத்து உண்ணக் கொடுத்த துயரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு பாலியல் அடிமைகளாக துன்புறுத்தப்படும் யாஷ்டி பெண்களின் நிலை தொடர்பில் ஈராக்கின் பெண் எம்.பி. ஒருவர் கண்ணீருடன் குறிப்பிட்டுள்ளார். எகிப்தில் உள்ள தனியார் செய்தி ஊடகம் ஒன்றுக்கு செவ்வி அளித்த ஈராக்கின் பெண் எம்.பி. வியான் தேகில் ஐ.எஸ். தீவிரவாதிகள் யாஷ்டி பெண்கள் மீது நடத்தும் கொடூரத் தாக்குதல் தொடர்பில் வெளியிட்டுள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் சிக்கிய யாஷ்டி இளம்பெண் ஒருவரை 3 நாள்கள் உணவு மற்றும் தண்ணீர் எதுவும் அளிக்காமல் சிறையில் வைத்திருந்துள்ளனர். இந்த நிலையில், அவருக்கு சோறுடன் இறைச்சியும் வழங்கியுள்ளனர். மிகுந்த பசியுடன் இருந்த அந்த இளம் பெண், அந்த உணவைச் சாப்பிட்டார். இதனை அடுத்து, அந்தப் பெண்ணிடம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கூறியது கொடூரத்தின் உச்சம் என்று வியான் தேகில் தெரிவித்துள்ளார்.

மேற்படி யாஷ்டி பெண்ணுடன் கடத்தப்பட்ட அவரது ஒருவயது மகனை கொன்று சமைத்து, அந்த மாமிச உணவையே அவருக்கு வழங்கினோம் எனத் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளைப் பொறுத்தமட்டில் யாஷ்டிகளை இஸ்லாமியர்களாகவோ அரேபியர்களாகவோ ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் சாத்தான் வழிபாட்டாளர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர்.

இதனாலேயே யாஷ்டி பெண்கள் மீது ஐ.எஸ். கொடூரத் தாக்குதல்களை நடத்துகின்றது என சமூக ஆர்வலர்களும் அரசியல் நோக்குநர்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




# ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இலங்கை அணியில் இணைந்தார் சுழல் பந்துவீச்சாளர் தனஞ்சய!

கொழும்பு, ஜூன் 30

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஸிம்பாப்வே அணிக்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டித் தொடருக்காக கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்திற்காக விளையாடிவரும் அகில தனஞ்சய ஐந்து வருடங்களுக்குப் பின்னர் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை மஹாநாம கல்லூரியைச் சேர்ந்த 24 வயதாகும் அகில தனஞ்சய, இளம் வயதிலேயே இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரான ருவன் கல்பகேயின் தலைமையிலான இளையோர் அணிக்கு இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டித் தொடருக்குத் தயாராகி வந்த நிலையில், பாகிஸ்தான் அணியின் அப்போதைய உலகின் சிறந்த சுழல் பந்து வீச்சாளரான சயீத் அஜ்மல் போன்ற சுழல் பந்து வீச்சாளர் ஒருவரை இலங்கை அணி களமிறக்க வேண்டிய தேவை இருந்தது.

அந்த வகையில், வலை பயிற்சிகளின் போது சிறப்பாக பந்து வீசிக்கொண்டிருந்த அகில தனஞ்சய ஓப் பிரேக், லெக் பிரேக், கூக்லீஸ், கரம் பந்துகள் மட்டுமல்லாது தூஸ்ரா போன்ற பலவிதமான பந்துகளை வீசிக்கொண்டிருந்த போது அப்போதைய இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்தன மற்றும் அண்மையில் இலங்கை அணியை விட்டு வெளியேறிய தலைமைப் பயிற்றுவிப்பாளர் கிராம் போர்ட் ஆகியோரால் ஈர்க்கப்பட்ட நிலையில் நேரடியாக இலங்கை தேசிய அணிக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

இதன் முதல் கட்டமாக கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கை பிரிமியர் லீக் தொடரில் மஹேல ஜயவர்தன தலைமையிலான வயம்ப யுனைடட் அணிக்காக தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ந்தும் அணித் தலைவர் மஹேலவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க கடந்த 2012 ஆம் ஆண்டு, இருபதுக்கு 20 உலகக் கிண்ண போட்டிக்கான 30 பேர் கொண்ட ஆரம்பக் கட்ட அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 15 பேர் கொண்ட இலங்கை குழாமிற்கு உள்வாங்கப்பட்டார். அதனையடுத்து நேரடியாக இலங்கை மண்ணில் நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் இடம் பிடித்த தனஞ்சய இந்தப் போட்டித் தொடரில் மொத்தமாக இலங்கை பங்குபற்றிய 5 போட்டிகளில் மூன்று போட்டிகளில் களமிறங்கி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அகில தனஞ்சய சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனை விட வெவ்வேறு விதமான பந்துகளை வீசக்கூடிய திறமையை பெற்றிருந்தார். எனினும், அதே ஆண்டில் ஆஸ்திரேலிய மண்ணில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நியூஸிலாந்து அணியுடனான ஒருநாள் போட்டியில் அறிமுகமான போதிலும் மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டமையால் தனஞ்சயவுக்கு அந்தப் போட்டியில் பந்து வீச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில் சச்சித்ர சேனநாயக்க போன்ற ஏனைய புதிய பந்து வீச்சாளர்களின் வரவுகளால் அகில தனஞ்சய இலங்கை கிரிக்கெட் தெரிவாளர் குழுவின் கண்களுக்கு தென்படவில்லை.

எனினும், அதனை தொடர்ந்து நடைபெற்ற கழக மட்டப் போட்டிகளில் களமிறங்கினார். 23 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் போட்டித் தொடர்களில் பங்குபற்றிய அகில தனஞ்சய தனது திறமைகளை வெளிப்படுத்தி பந்து வீச்சில் பிரகாசித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையில் நடைபெற்ற மாகாண அணிகளுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளின் போது காலி அணியை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கினார். அந்த அணியில் இடம் பெற்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான சீக்குகே பிரசன்னவுடன் பந்து வீசும் வாய்ப்பை பெற்றார். 6 போட்டிகளில் பங்குபற்றிய அவர், 4.90 என்ற சராசரியில் மொத்தமாக 9 விக்கெட்டுகளை வீழ்த்தி அனைவரதும் கவனத்தையும் ஈர்த்தார்.

இதுவரை அவர் பங்குபற்றிய முதல் தர போட்டிகளில் 98 விக்கெட்டுகளையும் லிஸ்ட் 'ஏ' போட்டிகளில் 36 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

அதுமட்டுமல்லாது, 2016/17ஆம் ஆண்டுக்கான 'ஏ' பிரிவு பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாடிய அவர் 40.75 என்ற துடுப்பாட்ட சராசரியில் மொத்தமாக 326 ஓட்டங்களைக் குவித்திருந்தார். பங்களாதேஷ் அணி இலங்கை வந்திருந்த போது அந்த அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் 61 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். அத்துடன் அண்மையில் நிறைவுற்ற சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான 30 வீரர்களைக் கொண்ட உத்தேச அணியிலும் இடம்பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இளம் வீரரான தனஞ்சய இம்முறை முதல் தர போட்டிகளின் ஊடாக பெற்றுக்கொண்ட அனுபவங்களின் வாயிலாக மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் போட்டிகளில் பிரகாசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், இலங்கை அணி கடந்த காலங்களில் இடைப்பட்ட ஓவர்களைப் பலப்படுத்தக்கூடிய பந்து வீச்சாளர்கள் இல்லாமல் தடுமாறிய நிலையில், இவரது மீள்வருகை ஒரு வரப்பிரசாதமாகவே கருதப்படுகின்றது.

அதேநேரம், புதிய அணிக்கான தெரிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

அகில தனஞ்சய பல்வேறு விதமாக பந்து வீசக்கூடிய திறமைகளைப் பெற்றுள்ளார். அந்தவகையில் ஸிம்பாப்வே அணியுடனான போட்டிகளில் தனஞ்சயவை களமிறக்க எதிர்பார்த்துள்ளோம். கடந்த சில நாள்களாகவே இலங்கை அணிக்கான கதவை அவர் தட்டிக்கொண்டிருந்தார். தனஞ்சயவுக்கு வாய்ப்பளித்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுடான தொடர்வரை இலங்கையின் பயிற்றுநர் பொத்தாஸ்!

கொழும்பு, ஜூன் 30

இந்திய கிரிக்கெட் அணியின் இலங்கைக்கான கிரிக்கெட் விஜயம் முடியும் வரை இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்றுநராக நிக் பொத்தாஸ் பதவி வகிப்பார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்றுமுடிந்த சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியைத் தொடர்ந்து முன்னைய தலைமைப் பயிற்றுநர் கிரஹம் போர்ட் இராஜினாமா செய்தமையை அடுத்தே நிக் பொத்தாஸ் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்றுநராக செயற்பட்டு வந்தார்.

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் இலங்கைக்கான விஜயம் தொடர்பாக கொள்ளுப்பிட்டி மோவென் பிக் ஹோட்டலில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தொடரவுள்ள கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணியை எழுச்சியை நோக்கி நிக் பொத்தாஸ் கொண்டு செல்வார்.

எதிர்காலத்தில் முழுநேர தேசிய அணி பயிற்றுநர் குறித்து இதுவரை நாங்கள் தீர்மானிக்கவில்லை. ஆனால், தற்போதைய பயிற்றுநர் நிக் பொத்தாஸ் அப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்.

இன்னும் சில தொழில்சார் பயிற்றுநர்கள் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுநராவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்திய கிரிக்கெட் தொடர் முடிந்த பின்னர் உரியவரை நாங்கள் தெரிவு செய்து அவரை முழு நேரப் பயிற்றுநராக நியமிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரரான நிக் பொத்தாஸ் கடந்த 2000 ஆம் ஆண்டில் சர்வதேச ஒருநாள் போட்டிகள் மூன்றில் மாத்திரம் விளையாடியிருந்தார்.

218 முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள நிக் பொத்தாஸ் 11 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றுள்ளமையுடன் 218 ஆட்டமிழப்புகளில் பங்காற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களுக்கு உபாதை;



# தட்டையான கால்களே பிரதான காரணம்!

கொழும்பு, ஜூன் 30

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பன்னிருவரில் ஒன்பது பேர் கடந்த வருடம் உபாதைக்குள்ளாயினர்.

இதனை அடுத்து, வீரர்கள் உபாதைக்குள்ளாவதைத் தவிர்க்கும் நோக்கில் ஆஸ்திரேலிய டாக்டர் நிக்கலஸ் ஸ்ப்ரெஞ்சரின் ஒத்துழைப்பை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பெற்றுள்ளது.

அடிக்கால் மற்றும் கால் எலும்பு மற்றும் நரம்புகள் சார்ந்த மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற இவர், ஏதென்ஸ் 2004 ஒலிம்பிக் நீச்சலில் வெள்ளிப் பதக்கம் வென்றவராவார்.

இந்நிலையில், இலங்கை வீரர்கள் உபாதைக்குள்ளாவதற்கு அவர்களது அடிக்கால்களின் அமைப்பே காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைமையகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நிக்கலஸ் ஸ்ப்ரெஞ்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பலர் உபாதைக்குள்ளாவதற்கு அவர்கள் தட்டையான அடிக்கால்களைக் கொண்டிருப்பதே பிரதான காரணம்.

அத்துடன் பொருத்தமற்ற பாதணிகளை அவர்கள் பயன்படுத்துவது மற்றொரு காரணம்.

தொடை, கெண்டைக் கால், கணுக்கால் ஆகிய பகுதிகளில் ஏற்படும் உபாதைகளைத் தவிர்க்கும் வகையில் கிரிக்கெட் விளையாட்டிற்கு உகந்த பாதணிகளை அவர்கள் அணிவதே சிறப்பான அறிவுரையாகும்.

பயிற்சிகளின்போதும் கிரிக்கெட் போட்டிகளின் போதும் இரு வகையான பாதணிகளைப் பயன்படுத்துவதே சிறந்தது.

இந்தப் பாதணிகளுடன் அவர்கள் விளையாடும் போது உபாதைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கால்களில் 26 எலும்புகளும் 102 தசைநார்களும் இருக்கின்றன. வேகப்பந்து வீச்சாளர்கள் பந்துவீசும் போது அவர்களது உடல் பாரம் முழுவதையும் ஒரு நொடிப்பொழுதுக்கு அடிக்கால் தாங்குவதால் உபாதைகள் ஏற்படுகின்றன.

இதற்கு பொருத்தமான பாதணிகளை அணியாதமையே காரணமாகும்.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்த நிக்கலஸ் ஸ்ப்ரெஞ்சர் வீரர்களின் பாதங்களின் அளவுகளை எடுத்து அவரவர் பாதங்களுக்கு பொருத்தமான பாதணிகளை ஆஸ்திரேலியாவில் தயாரித்து கொண்டுவந்துள்ளார்.

இதேவேளை, வீரர்கள் சிலரின் யோசனைக்கு அமைய ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவரே இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார் என நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

இந்தத் திட்டம் 1999 இல் திலங்க சுமதிபால தலைவராக இருந்த காலத்திலும் பின்பற்றப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் ஏஷ்லி டி சில்வா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அணியினர் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கு செல்வதற்கு சில தினங்களுக்கு முன்னர் வருகைதந்த நிக்கி, வீரர்களின் பாதங்களின் அளவை எடுத்துக்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு திரும்பிச் சென்றார்.

அங்கு பாதங்களின் அளவுக்கு ஏற்ப பொருத்தமான பாதணிகளைத் தயாரித்துக் கொண்டு மீண்டும் வருகை தந்துள்ளார். இங்கு இரண்டு தினங்கள் தங்கியிருக்கும் அவர், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 30 முதல் 35 வீரர்களைப் பரீட்சிப்பார்.

இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவினங்களையும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இளம் வீரர் ஹசரங்க திறமைசாலி: குருசின்ஹ, மத்தியூஸ் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 30

இலங்கை கிரிக்கெட் அணிக்குத் தெரிவாகியுள்ள அறிமுக மற்றும் 19 வயதுடைய இளம் வீரர் வனிந்து ஹசரங்க திறமையான வீரர் என அணி முகாமையாளர் அசன்க குருசின்ஹவும் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸும் தெரிவித்துள்ளனர்.



இலங்கையில் களத்தடுப்பில் வெகுவாகச் சிறந்து விளங்கும் ஹசரங்க ஒரு திறமையான துடுப்பாட்டக்காரரும் ஆவார் என அசன்க குருசின்ஹ தெரிவித்துள்ளார்.

19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து அணிக்கு எதிராக கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் சுழல்பந்து வீச்சாளர் ஹசரங்க பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சிம்பாவேக்கு எதிராக நடைபெறவுள்ள முதல் இரண்டு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு மாத்திரமே இலங்கை அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் அசன்க குருசின்ஹ தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாறுபட்ட வீரர்கள் அடங்கிய அணிகள் குறித்து கவனம் செலுத்தப்படும். இதன் காரணமாகவே தினேஷ் சந்திமாலுக்கு இடம் வழங்கப்படவில்லை. கடைசி மூன்று போட்டிகளில் அவர் குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிம்பாவே அணிக்கு எதிரான முதல் இரண்டு போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அணி திறமைவாய்ந்தது என அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், மாகாணப் போட்டிகளில் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்திய வனிந்து ஹசரங்க திறமைசாலி எனவும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள லஹிரு மதுஷன்க ஒரு சிறந்த சகலதுறை வீரர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக மதுஷன்க 3 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியிருந்தார்.

இது இவ்வாறிருக்க, கடந்த 2012 ஆம் ஆண்டில் நியூஸிலாந்துக்கு எதிராக ஒரே ஒரு சர்வதேச ஒருநாள் போட்டியிலும், கடந்த 2013 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடைசியாக சர்வதேச இருபதுக்கு 20 போட்டியிலும் விளையாடியிருந்த அகில தனஞ்சய நான்கு வருடங்களின் பின்னர் இலங்கை அணியில் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எனக்கும் லசித் மலிங்கவுக்குமிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியது ஊடகங்களே!

### அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

ஒரு சில ஊடகங்களே எனக்கும் மலிங்கவுக்குமிடையில் முரண்பாட்டை தோற்றுவித்தன என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-




நான் எந்தவொரு இடத்திலும் கிரிக்கெட் வீரர் லசித் மலிங்கவை பெயர் குறிப்பிட்டு விமர்சிக்கவில்லை.

பொதுவாக விளையாட்டு வீரர்களுக்கு உடற்தகுதி அவசியம் என்று வலியுறுத்திக் கூறினேன். அதைவிடுத்து யாரையும் குறிப்பிட்டு எதுவும் நான் தெரிவிக்கவில்லை.

ஏதாவது ஒரு திட்டத்தை முன்னெடுக்கும் போது சில ஊடகங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் போகின்றது.

எமது நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு திறமை உள்ளது. ஆனால் உடற்தகுதியைப் பேணாமல் திறமையை வைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எனது கருத்து தொடர்பில் லசித் மலிங்க ஒரு ஊடகத்திற்கு தெரிவித்த விடயமே சர்ச்சையை ஏற்படுத்தியது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது செல்வாக்கை நிரூபித்துக் காட்டட்டும் என்றார் சுமந்திரன்.

இந்தத் தொலைக் காட்சிப் பேட்டியில் சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்த கருத்துக்களின் முக்கியமானவை வருமாறு :-

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடந்தபோது முதல்வர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்புக்கு எதிரான ஒரு கட்சியைத்தான் மறைமுகமாக ஆதரித்திருந்தார்.

அதற்குப் பிறகு தமிழ் மக்கள் பேரவையைக் கூட தமிழரசுக் கட்சிக்கு மட்டுமே சொல்லாமல் முதல்வர் ஆரம்பித்தார். இரவோடு இரவாகக் கூடி இரகசியமாக அந்த அமைப்பை ஆரம்பித்திருந்தார்.

இன்று தமிழ் மக்களுக்குத் தலைமைத்துவத்தைக் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி வித்தியாசமான ஒரு பாதையிலே செல்லுவதற்குத் தனக்கான ஓர் அமைப்பை அவர் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இந்த அமைச்சர் வாரியத்தையும் அதற்காகவே அவர் மாற்ற முற்பட்டார் என்பது எங்களுக்குப்புலனாகத்தெரிகின்றது. நான்கு பேரையும் மாற்றி விட்டு, அப்படிப் பிரிந்து போவதற்குத் தன்னுடன் வரக் கூடியவர்களை அமைச்சர்களாக நியமித்து, அவர் செல்லத் தலைப்பட்டார். அதைத் தான் இந்த 21 பேர் தடுத்து நிறுத்தினார்கள்.

உங்களின் (முதல்வரின்) முறைகேடான செயற்பாடுதான் இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம் என்பதை ஐயா சம்பந்தனே அவருக்குக் கூறியிருந்தார்.

சம்பந்தன் ஐயா முறைகேடு என்று சுட்டிக் காட்டிய விடயத்தைத் திருத்தி அமைப்பவர் போலப் பாசாங்கு செய்தார்.

அதைத் தொடர்ந்து இப்போது அவர் செய்கின்ற காரியங்கள் அவர் ஏற்கனவே தனித்துச் செல்வதற்குத் தலைப்பட்ட பாதையில் அவர் பயணத்தை ஆரம்பித்துவிட்டார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

தமிழரசுக் கட்சியை நீங்கள் புறந்தள்ளிச் செயற்பட்டிருக்கின்றீர்கள். அப்படித் தமிழரசுக் கட்சித் தலைவரே அவருக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன் பிறகு தமிழரசுக் கட்சி கூடி ஏகமனதாக ஒருவரை சிபாரிசு செய்யும்போது அதனைப் புறந்தள்ளி – அதைப்பற்றிக் கணக்கெடுக்காமல் – தமிழரசுக் கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, விலக்கி வைக்கப்பட்டு, மூன்று வருடங்களுக்கு எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது என்று தமிழரசுக் கட்சியால் தீர்மானிக்கப்பட்டிருப்பவருக்கு (அனந்தி சசிதரனுக்கு) இப்போது அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளார்.

அவரது நடத்தை எந்தத் திசையில் போகின்றது என்பது எமக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

முதலமைச்சர் சம்பந்தமாக பலவித விடயங்கள் உள்ளன. அவை இப்போது தான் வெளிவர ஆரம்பித்துள்ளன.

பிரேமானந்தா சுவாமி இரட்டைக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டார். அதுவும் எத்தகைய குற்றங்கள்? சிறுவயதுச் சிறுமிகளைக் கற்பழித்துக் கொலை செய்தார், இன்னொரு கொலை செய்தார் என்று நிரூபிக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டவர்.

இலங்கை நீதி மன்றத்தில் அல்ல. இந்திய நீதிமன்றங்களில். உச்ச நீதிமன்றம் வரை அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு ஒவ்வொரு நாளும் பூசை செய்து வழிபடும் ஒருவர் எப்படியாக இந்தச் சபைக்கு ஒரு முதல்வராக இருக்க முடியும் என்ற ஒரு கேள்வி எழுந்துள்ளது.

இது ஒரு மதம் சார்ந்த விடயம் மட்டுமல்ல. அவர் ஒரு நீதியரசராக இருந்தவர். நீதித்துறை பற்றி அவருக்குத் தெரியும். இந்த நாட்டில் உள்ள நீதித்துறைக்கும் இந்தியாவில் இருக்கும் நீதித்துறைக்கும் உள்ள வித்தியாசம் அவருக்குத் தெரியும்.

அத்தகைய படிமுறைகள் ஊடாகக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் தொடர்பில் இவர் கொண்டிருக்கும் எண்ணம் இவ்வளவு வித்தியாசமானதாக இருக்கும் என்றால் அவரது தீர்மானிக்கும் சக்தி அல்லது நுண்மை எத்தகையது என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

அது பற்றி ஒருவர் கேள்வி எழுப்பியபோது அதனை இயேசு கிறிஸ்துவும் ஒரு குற்றவாளிதானே என ஒப்பிட்டுப் பேசுவதும் பின்னர் தான் அப்படிப் பேசவில்லை என்று கூறுவதும் அவரது மனநிலை பற்றிய கேள்விகளை எழுப்பும் விடயங்கள்.

இப்படியான விவகாரங்கள் வெளிவருகின்றபோது, இவர் நிதானித்து, சரிவர விடயங்களைப் பகுத்தறிந்து, செயற்படுகின்றாரா அல்லது இல்லையா என்ற பலத்த சந்தேகம் ஏற்படுகின்றது.

முதல்வர் விக்னேஸ்வரனின் இல்லத்துக்கு முன்னால் அந்த ஒடுங்கிய வீதியில் அன்று கூடிய கூட்டத்தைப் பார்த்த அவர் மக்கள் ஆதரவு தம்பக்கம் என்று நினைத்துவிட்டார் போலும். ஒடுங்கிய அந்த வீதியில் கூடியவர்கள் ஒரு சில நூறு பேர் தான்.

மக்களுக்கு நன்றி என்ற பெயரில் 'நந்தவனத்து ஆண்டி' என்று விமர்சித்த முதல்வர் தமக்கு மக்களின் ஆதரவு இருக்கும் என்று நம்பினால் – மக்களின் ஆதரவு கட்சிக்கல்ல தனக்கே என்று கருதினால் – மாகாண சபையைக் கலைத்துவிட்டுத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று சிறிதரன் வைத்த கருத்தையே நானும் முன்வைக்கிறேன். அப்படித் தேர்தலைச் சந்திக்க அவர் தயாரா?

– இப்படிக் கேட்டார் சுமந்திரன் எம்.பி. (உ)

## தற்காலிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கமான – விவரமான – கடிதம் ஒன்றை வடக்கு மாகாண முதலமைச்சர் அனுப்பி வைத்திருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

இக்கடிதத்தின் பிரதி கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சியின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டனவா என்பது குறித்த தகவலை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (உ)

## மதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை அவர் நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்திப்பார்.

நேற்று அவர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் கோவில் ஆகியவற்றுக்கும் சென்றார். (உ)

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கினாலும் பாதகமான மாற்றுச் சட்டம் வராது

## அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 30

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் நாட்டுக்குப் பாதகமான மாற்றுச் சட்ட மூலம் கொண்டுவரப்படாது என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது எமது நாட்டிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கிவிட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பிலான விவகாரம் தற்போதும் உத்தேச மட்டத்திலேயே உள்ளன.

எவ்வாறாயினும் இந்த சட்டத்தை நீக்கிவிட்டோ அல்லது மாற்றம் செய்துவிட்டோ அரசாங்கத்தினதும் நாட்டினதும் பாதுகாப்பிற்கு பாதகமான ஒரு சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று நாம் ஒருபோதும் சிந்திக்கவில்லை.– என்றார். (ம)

# கொழும்பிலுள்ள ஓட்டோக்களில் பயணிப்பதை தவிர்த்துக்கொள்க!

## அமெரிக்கா தனது பெண்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 30

இலங்கைக்கு சுற்றுலா சென்றுள்ள அமெரிக்கப் பெண்கள் கொழும்பு நகரிலுள்ள ஓட்டோக்களில் ஏறுவதைத் தவிர்க்குமாறு இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஓட்டோ சாரதிகள், பெண் சுற்றுலா பயணிகளுடன் அங்க சேட்டையில் ஈடுபடும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதையடுத்தே இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் இணையத்தளத்தில் இந்த விடயம் பதிவிடப்பட்டுள்ளது.

ஓட்டோக்களில் பயணிக்காமல் சுற்றுலா போக்குவரத்து நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களில் தங்கள் பயண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுற்றுலா பயணிகளுக்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் இந்த எச்சரிக்கையானது இலங்கையின் சுற்றுலா துறைக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இருபது பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 30

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இருபது பேர் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 12 பேரும், பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 8 பேரும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டபோது அங்கு பொலிஸ் பொறுப்பதிகாரியொருவர் நியமிக்கப்படாமல் இருந்தமை தெரியவந்தது.

அது தொடர்பாக அவர் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுடன் கலந்தாலோசித்த பின்னரே மேற்கூறிய இடமாற்றங்கள் நடைபெறவுள்ளன எனத் தெரியவருகின்றது. (ம)

## அனந்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக திருமதி அனந்தி சசிதரனும் வடக்கு மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து இவர்கள் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர். இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

இவர்கள் தற்காலிகமாகவே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் மூன்று மாதங்களின் பின்னர் இந்தப் பதவிகள் மீளாய்வு செய்யப்படும் எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அங்கு வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

கட்சித் தலைவர்களுடன், விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் கலந்துரையாடிய பின்னரே நிரந்தரமாக அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், விவசாய அமைச்சு தொடர்ந்து தமது பொறுப்பிலேயே இருக்கும் எனவும் இதன்போது முதலமைச்சர் கூறினார்.

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் நிதி மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அதுதொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய கல்வி அமைச்சர் த.குருகுலராசா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

அதையடுத்து வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற பல்வேறு முரண்பாடுகளுக்குப் பின்னர் புதிதாக, தற்காலிக அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட இருவர் நேற்றுப் பதவிகளைப் பொறுப்பேற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு வந்த சுமார் முப்பதுக்கும் அதிகமான இளைஞர் கூட்டம் சடுதியாக மேற்கொண்ட இக் கல்வீச்சுத் தாக்குதலால் உரும்பிராய் வடக்கில் நேற்றிரவு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

நேற்று மதியம் உரும்பிராய் வடக்கு கற்பக விநாயகர் ஆலய வீதியில் மது போதையில் நின்ற சில இளைஞர்கள் அப்பகுதியால் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்றின் மீது கல் வீச்சை மேற்கொண்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஓட்டோ சாரதி கல்வீசியவர்களை நையப்புடைத்த பின்னர் பொலிஸாரை வரவழைத்து அவர்களை ஒப்படைத்தார்.

இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவானவர்கள் எனக் கூறப்படும் ஏறக்குறைய 30 இற்கும் அதிகமான இளைஞர் கூட்டம் ஒன்று நேற்றிரவு 8.00 மணியளவில் ஓட்டோ சாரதியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்குச் சென்றுள்ளது.

முகங்களைக் கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு சென்ற அக்கும்பல் உரும்பிராய் வடக்கில் உள்ள ஓட்டோ சாரதியின் வீட்டின் மீது சரமாரியாக கற்களால் வீசித் தாக்குதலை மேற்கொண்டது.

இதன்போது அவரது வீட்டுக்கு அருகே இருந்த யாழ்.நீதிவான் எஸ்.சதீஸ்தரனின் வீட்டின் மீதும் கல் வீச்சு இடம் பெற்றது. அது மட்டுமன்றி, அப்பகுதியில் இருந்த வேறு சில வீடுகள் மீதும் தாக்குதல் இடம் பெற்றது எனவும் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. எனினும், தாமதமாகவே பொலிஸார் அங்கு சென்றனர் எனவும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# சீர்குலைந்த பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசு நடவடிக்கை



## மாளிகாவத்தையில் வீடுகள் கையளிப்பு நிகழ்வில் பிரதமர் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 30

சீர்குலைந்த பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு கடந்த இரண்டு வருட காலத்துக்குள் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாளிகாவத்தை 'லக்கிரு செவன' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளின் ஒருதொகுதி முதல் கட்டமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொது மக்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்விலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டளவில் பல வீடமைப்புத் திட்டங்கள் தடைப்பட்டிருந்தன. அரசு நிர்வாகத்தைப் பொறுப் பேற்ற சந்தர்ப்பத்தில் கடனுக்கான வட்டி மிக அதிகமாகக் காணப்பட்டது. இந்தச் சவால்களை கடந்த 2 வருட காலப் பகுதியில் அரசு வெற்றிகரமாக எதிர் கொண்டது.

எதிர்வரும் 3 வருட காலப் பகுதியில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டத்தைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், நாட்டை அபிவிருத்தி செய்ய இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் மேலும் பல கட்சிகள் ஒன்றிணைந் துள்ளன. நாட்டை அபிவிருத்தி செய்வதே நல்லாட்சி அரசின் நோக்கமாகும்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன் நிற்கின்றது. -என்றார். (எ)

# ஆலய மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 30

மட்டுவில் கிழக்கு புத்தூர் வீதியோரம் அமைந்துள்ள ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு பூசைகளின் பின்னர் நடைபெறும்.

கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு விளக்கு வைத்தல் நிகழ்வு நடைபெற்று ஆனி உத்தர நாளான இன்று பொங்கல் சிறப்பு நிகழ்வு நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

★★★

யாழ்ப்பாணம் ஜூன் 30

எழுதுமட்டுவாழ் விழுபழை கண்ணகை அம்பாள் (ஸ்ரீமீனாட்சி) ஆலய மகா சங்கா பிஷேகம் இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் இடம் பெறும்.

அம்பாளுக்கு 1008 சங்குகளாலும் பரிவாரமூர்த்திகளான பிள்ளையார், முருகன், வைரவப் பெருமான் ஆகியோருக்கு 108 சங்குகளாலும் அபிஷேகம் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப்பூசைகள்இடம்பெற்று விநாயகர், முருகன் சகிதம் அம்பிகை வெளிவீதி உலா வருகை தரவுள்ளார்.

சங்காபிஷேகக் கிரியைகள் சிறிசக்தி கிரியா குருமணி. சிவஸ்ரீ இ.குமாரசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

★★★

நீர்வேலி ஜூன் 30

நீர்வேலி தெற்கு மனோண்மணி அம்மன் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இன்று மாலை 5 மணிக்கு விசேட பூசைகள்,அபிஷேகம் என்பன இடம்பெற்று இரவு 8 மணிக்கு பொங்கல் உற்சவம் இடம்பெறும்.

# கருத்தரங்கு

கபே அமைப்பின் ஏற்பாட்டில் யாழில் அரசியல் கட்சிகளுக்கு உள்ளூராட்சி தேர்தல் பற்றி அறிவூட்டல் கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் அரசியல் கட்சிகளைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# ஏழாலை இலக்கிய கலாநிதி கந்தையாவின் நூற்றாண்டு அகவை

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஏழாலை இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையாவின் நூற்றாண்டு அகவை நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் வே. கனக சபாபதி தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான முத்தமிழ்க் குருமணி சகல கமசங்கிரகர் சிவஸ்ரீ நா. சர்வ வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் திருமறை ஓதல், வரவேற்பு நடனம், வரவேற்புரையைத் தொடர்ந்து, ஆசியுரையை நல்லை ஆதீன சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்குவர். வாழ்த்துரையை அகில இலங்கை திருமறைக் கலாமன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் நிகழ்த்துவார். தொடர்ந்து பண்டிதரின் புத்தகக் கண்காட்சி இடம்பெறும்.

'சைவ நீதி' சிறப்பு மலர் வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முது நிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் நிகழ்த்துவார். தொடர்ந்து பண்டிதர் மு.க வின் 'திருமுறைத் தேம்பிழி' நூல் வெளியீட்டுரையை சைவப் புலவர் சித்தாந்த செம்மணி செ.நவநீதகுமாரும், சித்தாந்த சிறப்பிதழ் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சைவப்புலவர் எஸ்.ரமணராஜாவும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகளின் இசை நிகழ்வு, ஏழாலை அபிநயா கலாலய மாணவிகளின் நாட்டியாஞ்சலி, தனி நடனம், கருணாகரப் பிள்ளையார் சாதுசங்கமமட அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும், " மங்கையர்க்குத் தனி அரசி" நாடகம் என்பன இடம்பெறும். (ச)

# விசேட அதிரடிப்படைக்கு டிங்கி படகுகள் கையளிப்பு



விசேட அதிரடிப்படையினருக்கான டிங்கி படகுகளை உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

களனி கங்கையின் கந்துவத்த பிரதேசத்தில் இடம்பெறும் அத்துமீறிய இரத்தினக் கல் அகழ்வைத் தடுப்பதற்காக இந்த டிங்கி படகுகள் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவர் கித்சிறி திஸாநாயக்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.ஆர். லத்தீப், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர்களான டி.ஜீ. டபிள்யூ அமரசிறி, பிரதீப் தேனுவர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

# "ஏழிசை மாலை 20" நிகழ்வுகள் இன்று வீரசிங்கம் கல்லூரியில்

தென்மராட்சி,ஜூன் 30

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியினருடன் இணைந்து நடத்தும் "ஏழிசை மாலை 20" நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் த. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி கோட்டக் கல்வி ஓய்வு நிலைப்பணிப்பாளருமாகிய கு.சிவானந்தமும் கலந்து கொள்வர். நிகழ்வில் கல்லூரி ஆசிரியை திருமதி மதிலோஜினி லோகீசனின் இசைக் கச்சேரி, உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களின் குழுப்பாடல், சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி செல்வி ஸ்ரீ சாகரா, மந்துவில் றோ.க.த.க.பாடசாலை மாணவன் ஸ்ரீ.நிருஷன் ஆகியோரின் மெல்லிசை, இசையாசிரியர்களான திருமதி கவிதா செல்வமூர்த்தி (நாவற்குழி ம.வி.), திருமதி றஜனி சுதர்சன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), திருமதி கலைச்செல்வி சாயிரூபன் (மிருசுவில் அ.த.க.பாடசாலை), திருமதி கமலவேணி ஆனந்தரூபன் (மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை) ஆகியோரின் ஆசிரியர் குழுப்பாடல், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் குழுப்பாடல் ஆகியவையும் இடம்பெறும். நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மூத்த விரிவுரையாளர் சி.மகேந்திரன், வயலின் சுருதிஞான திலகம் அ.ஜெயராமன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# நல்லூர் உற்சவ முன்னாயத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நல்லூர் திருவிழாவை ஒட்டிய முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெற உள்ளது. எதிர்வரும் ஜூலை 28 திகதி முதல் ஓகஸ்ட் 23 ஆம் திகதி வரை நல்லூர் உற்சவம் நடைபெறவுள்ளது. (உ)

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு எதிரிகளான


# ஏழு பேரையும் விடுவிக்க வலியுறுத்தி ஞாயிறன்று சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 30

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கை ஒட்டி 26 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் ஏழு தமிழர்களையும் விடுதலை செய்யக் கோரி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை4.30மணிக்குசென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றைநடத்துவதற்கு 'மேபதினேழு இயக்கம்' ஏற்பாடு செய்துள்ளது.

பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, றொபர்ட், பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேரையும் விடுவிக்கக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)






யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோரை அவர்தம் அலுவலகங்களில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் சில பதிவுகள் இவை. (ம -07)



யாழ். ரில்கோ ஹோட்டலில் இந்தியத் தூதுவர் நேற்றிரவு அளித்த இரவு விருந்தின் போது துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் முதல்வர் விக்கினேஸ்வரனும் முதல் படத்தில் காணப்படுகின்றனர். டக்ளஸ் தேவானந்தா எம்.பி. முதல்வருடன் உரையாட, அருகில் மாவை சேனாதிராசா எம்.பியும் அனந்தி சசிதரனும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். அந்த இரவு விருந்துக்கு இடையே முதல்வரும் காலைக்கதிர் ஆசிரியர் என்.வித்தியாதரனும் கருத்துப் பரிமாறுகின்றமையை கடைசிப் படத்தில் காணலாம்.



ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசுவரர் ஆலய வருடாந்த இரதோற்சவம் நேற்று இடம்பெற்றது. விநாயகர், சோமஸ்கந்தர், வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் ஆகிய முத்தெய்வங்களுக்கும் தனித்தனி இரதமாக மூன்று இரதங்கள் இழுக்கப்பட்டன. இந்த திருவிழாவில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ம)

# மஹிந்தவின் கோட்டைக்குள் மைத்திரி!

கொழும்பு, ஜூன் 30

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவின் கோட்டைகளில் ஒன்றாகக் கருதப்படும் அபயாராம விகாரைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் மஹிந்த ஆதரவு அணியினரிடையே பெரும்அதிர்வலைகளைஏற்படுத்தியுள்ளதுஎனக்கூறப்படுகின்றது.

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் அவருக்கான முக்கிய அரசியல் தளங்களில் ஒன்றாக கொழும்பு நாரஹேன்பிட்டி அபயாராம விகாரை மாற்றியமைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் அரசாங்கத்துக்கு எதிரான கலந்துரையாடல்கள், கூட்டு எதிர்க்கட்சியின் மேதினக் கூட்ட ஏற்பாடுகள்என்பனபோன்ற அனைத்தும் அபயாராம விகாரையை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டிருந்தன.



பின்வந்த காலங்களில் பத்தரமுல்லை நெளும் மாவத்தையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தனது அரசியல் அலுவலகத்தை உருவாக்கிக் கொண்டதன் பின்னர், அபயாராம விகாரையின்முக்கியத்துவம்குறைந்து போயிருந்தது. எனினும் அந்த விகாரை தொடர்ந்தும் மஹிந்த ஆதரவுத் தளத்தில் இயங்கி வந்திருந்தது.

இந்நிலையில் அபயாராம விகாரைக்கு சூரியக்கதிர் மின்னுற்பத்தி சாதனங்கள் பொருத்தப்பட்டு மின்சார விநியோகம் ஆரம்பிக்கப்படும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இலங்கைக்கானஜப்பான்தூதுவர்மற்றும்நீதியமைச்சர்விஜேதாச ராஜபக்ஷ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2017 இல் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பெற்றது